உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-6 இதழ்-160

ஏப்ரல் 16-30 2023

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்



எதிரியின் பலத்தை பாதியாக குறைக்கும் திருவாலீஸ்வரர்

e-magazine
www.aanmeegamalar.com e-magazine
www.aanmeegamalar.com e-magazine

## அக்ஷய தீர்த்தத்தில் நீராடி

# தொழுநோயிலிருந்து விடுபட்ட நவகிரகங்கள்

# மனிதர்களை உயர்வடைய செய்யும் அதிர்வெண்



நல்லது செய்தால் நன்மை விளையும் என்பது இந்து மதத்தின் தாரக மந்திரம், இறைவனை வணங்கினால் மட்டும் நன்மை வந்தடையாது. உலகில் மற்ற உயிரினங்களுக்கு நன்மை செய்தால்தான் மனிதவாழ்வை எளிதாக கடக்க உதவும் பலன்கள் ஒருவனை வந்து சேரும்.

இதை பல்வேறு வழிமுறைகளில் பல்வேறு தரப்பினர் அறிவியல் பூர்வமாக ஆராய்ந்தாலும், அவர்களின் ஆராய்ச்சியின் முடிவில், இந்து மதம் கூறியது உண்மை என்றே பதிலாக வந்து அனைவரையும் ஆச்சரியப்படுத்தியிருக்கிறது.

இந்தவகையில் அதிர்வெண் ஆராய்ச்சியாளர்கள் ஒருவித ஆராய்ச்சி செய்துள்ளனர், அதிர்வெண்கள் மூலம் மனித வாழ்வை ஆராய்ந்துள்ளனர்.

அதன்படி பூமியின் அதிர்வெண் 27.4 ஹெர்ட்ஸ் என்று கணித்துள்ளனர். ஆனால் இது போன்ற அதிர்வுறும் இடங்கள் பூமியில் உள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்,

மருத்துவமனைகள், உதவி மையங்கள், சிறைகள், நிலத்தடி போன்றவைகளில் அதிர்வு 20 ஹெர்ட்ஸ் அல்லது அதற்கும் குறைவாக குறை கிறது என்று கணித்துள்ளனர்.

மனிதர்களிடமும் அதிர்வெண் உள்ளது, இந்த அதிர்வெண் குறையும்போது மனிதர்களை தீய வைரஸ் கிருமிகள் ஆக்கிரமிப்பதாக கூறியுள்ளனர்.

அதன்படி மனிதர்களிடம் அதிர்வெண் ஹெர்ட்ஸ் கூடும்போதும் குறையும் போது என்ன என்ன நிகழ்வு நிகழும் என்பதையும் விரிவாக கூறியுள்ளனர்.

- 0.2 முதல் 2.2 ஹெர்ட்ஸ் வரை அதிர்வெண் குறையும்போது பயம் வெளிப்படும்.
- 0.1 முதல் 2 ஹெர்ட்ஸ் வரை அதிர்வெண் குறையும்போது மனிதர்களுக்கு வலி தெரியும்.
- 0.9 முதல் 6.8 ஹெர்ட்ஸ் வரை குறையும் போது எரிச்சல் ஏற்படும்.
- 0.6 முதல் 2.2 ஹெர்ட்ஸ் வரை இருக்கும் போது சத்தமிடத் தோன்றும்.
- 0.8 முதல் 1.9 ஹெர்ட்ஸ் வரை இருக்கும் போது தற்பெருமை ஏற்படும். என்று கணித் துள்ளனர்.

## மனிதர்களிடம் அதிர்வெண் கூடும் போது ஏற்படும் செயலையும் கண்டுபிடித்துள்ளனர்

- தாராள மனப்பான்மையுடன் மனிதன் செயல்படும்போது 95 ஹெர்ட்ஸ் கூடுகிறது.
- நன்றியுணர்வை வெளிப்படுத்தும்போது 150 ஹெர்ட்ஸ் வரை கூடுகிறது.
- ஏதேனும் ஒன்றின்மீது இரக்கம் கொள்ளும் போது 150 ஹெர்ட்ஸ் அல்லது அதற்கு மேற்பட்டு அளவு கூடுகிறது.
- அனைத்து உயிரினங்களிடம் அன்பு மற்றும் இரக்கம்கொள்ளும்போது அதிர்வெண் 150 ஹெர்ட்ஸ் மற்றும் அதற்கு மேல் கூடுகிறது.
- தன்னிலை மறந்து உலகை நேசிக்கும் போதும், மற்றவருக்கு ஏற்படும் துன்பத்தை தனதாகஎண்ணும்போதும் 205hz இலிருந்து அதற்கு மேல் கூடுகிறது.

மேலும்

அன்பு, புன்னகை, நன்றி, விளையாட்டு, ஓவியம், பாடுவது, நடனம், யோகா, தியானம், சூரியோதயத்தை பார்ப்பது, உடற்பயிற்சி செய்வது, இயற்கையை ரசிப்பது போன்ற செயலில் ஈடுபடும்போது அதிர்வெண் கூடுவதாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

பூமியின் அதிர்வெண் மனிதர்களுக்கு பயன்படும் உணவுகள், விதைகள், தானியங்கள், பருப்பு வகைகள் பழங்கள், காய்கறிகள் மற்றும் குடிநீர் போன்றவற்றை மனிதர்களுக்கு கொடையாக அளிக்க உதவுகிறது.

செடி, கொடி, உணவுகள், தானியங்கள் போன்றவை விளையாத பூமியில் அதிர்வெண் குறைவாக இருப்பதே காரணமாகும்.

மேலும் மனிதர்கள் கூட்டுப்பிரார்த்தனை, பஜனைகள், தியானங்கள் செய்யும்போது அதிர்வு மட்டும் 120 முதல் 350 ஹெர்ட்ஸ் வரை செல்கிறது.



# இல்லறவாசியானாலும் இறைநிலை அடைய வள்ளுவர் கூறும் அற்புதமான வழிமுறை



ஒவ்வொரு மதத்திலும், தாங்கள்சம்பாதிக்கும் தொகையில் ஒரு குறிப்பிட்ட பகுதி தங்களின் மத விரி வாக்கத்திற்கு, தாங்கள் சார்ந்த மத அமைப்பிடம்கொடுப்பதை கடமையாக கடைபிடித்து வருகின்றனர்.

இந்த முறை இந்து மதத்தில் கிடையாது, ஆனால் இந்து மதத்தில் வருமானம் ஈட்டும் ஒவ்வொருவரும், தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை, குறிப்பிட்ட பிரிவினருக்கு அவர் களின் வாழ்வாதாரத்திற்கு செலவழித்தால், அவர்களுக்கு புண்ணியம் வந்து சேரும் என்று திருவள்ளுவர் திருக்குறளின் வாயிலாக கூறியுள்ளார்.

**இல்வாழ்வான் என்பான்**
**இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை.**

– குறள் 41


பொருள்:

இல்லறத்தில் இருப்பவர்கள், 1.பிரம்மச்சரியம், 2.வானப்ரஸ்தம், 3.சந்நியாசம் அல்லது துறவு என்ற மூன்று நிலைகளிலும் இருப்பவர்கள் அறவழியில் தங்கள் வாழ்க்கையை நடத்த உதவ வேண்டும்.

என்று கூறியுள்ளார். இதன் மூலம் மேற்கண்ட மூவருக்கு உதவி செய்யும்போது, அந்த மூவருக்கு கிடைக்கும் புண்ணியத்தின் ஒரு பகுதி, இல்லறவாசிக்கும் கிடைக்கும்.

பிரம்மச்சரியம், வானப்ரஸ்தம், சந்நியாசம் போன்றவற்றை கடைபிடிப்பவர்கள் செய்யும் வழிபாட்டு முறையை இல்லறவாசிகளால் கடைபிடிக்க முடியாததால், அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவி செய்வதன் மூலம், இறைநிலையை அடைய அந்த மூவர் செய்யும் முயற்சியிக்கு இல்லறவாசியும் ஒரு தூணாக நின்று தன்னால் முடிந்த உதவிகளை செய்யும் போது, அந்த மூன்று பேருக்கு கிடைக்கும் புண்ணியத்திலும் இல்லறவாசிக்கு பங்கு கிடைக்கும், என்பதை வள்ளுவர் மிக அழகாக கூறியுள்ளார்.

aanmeegamalar.com



# நோய்களை தீர்த்து புண்ணியத்தை கூட்டும் பலாசுர மரம்

பலாசுமரம் (Flame tree) அல்லது புரசமரம், இந்த மரத்தை பற்றி குறிஞ்சி பாட்டில் சொல்ல பட்டு உள்ளது. ரசாயன உரங்கள் போட்டு பூமி கெட்டு இருந்தால் இந்த மரத்தை தோட்டத்தில் வளர்க்கலாம்.

இது ஒரு காயகற்ப மூலிகை மரமாகும் இந்த மரம். இதன் வேர் இலை பூ பட்டை வேர் எல்லாம் மருத்துவ தன்மை கொண்டது. இதனை நிழலில் உலர்த்தி பொடி செய்து சலித்து வைத்துக் கொண்டு தினமும் வெள்ளாடு பாலில் கலந்து முறைப்படி பத்தியம் இருந்து ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் உடலில் உள்ள உறுப்புகள் பலமடையும், இரத்தம் சுத்தமாகும், நீண்ட கால நோயில் இருந்து விடுபடலாம், நோயின்றி ஆரோக்கியமாக வாழலாம்.

இதன் பூக்கள் செந்தூரப்பூ என்று சொல்லப் படுகிறது. இது குங்கும பூவிற்கு ஒரு படி மேலே பயனுள்ள பூ இந்த பூவில் தங்க சத்து உள்ளது. இந்த பூவை நிழலில் உலர்த்தி பொடி செய்து தினமும் பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால் உடல் பொன்னிறமாக மாறும்.

இதே பூவின் பொடி சுடு நீரில் கலந்து சாப்பிட்டால் சுகர் கன்ட்ரோல் ஆகும். இதை கர்ப்பிணிகள் சாப்பிட பிறக்கும் குழந்தைகள் நல்ல ஆரோக்கியத்துடன் நல்ல நிறத்துடனும் வனப்புடன் பிறக்கும்.

இதன் இலைகளை அரைத்து சூட்டு கட்டிக்கு தடவி வந்தால் கட்டி அப்படியே அமுங்கி விடும். இந்த மரத்தின் பட்டையை கஷாயம் வைத்து குடித்தால் வயிற்றில் உள்ள புழுக்களை வெளியேற்றும் நன்றாக பசி எடுக்கும்.

இந்த மரத்தின் அடியில் கிருஷ்ணரும் தட்சி

ணாமூர்த்தியும் இருப்பதாக சொல்லப்படுகிறது.

இந்த மரத்தை சுற்றி வேண்டி வர குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. ஒரு காலத்தில் இந்த மரத்தை தான் சுற்றி வந்ததாக கூறப்படுகிறது. அரசனை நம்பி புருஷனை கை விட்ட பழமொழி இப்படி தான் வந்தது.

இதன் பிசின் சிகப்பு நிறத்தில் இருக்கும் காய்ந்த பிசினை தூள் செய்து பாலில் போட்டு 40 நாட்கள் சாப்பிட்டு வந்தால் நரம்பு தளர்ச்சி குணமாகும் ஆண்மை குறைவு நீங்கும். மைன்ட் பிரஷ்ஷாக இருக்கும்.

இதன் இலைகளை கசக்கி கசாயம் செய்து சாப்பிட்டால் மது அருந்துவதால் ஏற்படும் கல்லீரல் கொழுப்பு நோய் புகை பிடிப்பதால் ஏற்படும் மண்ணீரல் பிரச்சினை சரியாகும். இதன் இலைகளை சுடுநீரில் போட்டு கொதிக்க விட்டு எடுத்து வயிற்றில் வைத்து கட்ட தொப்பை குறையும் வயிறு வலி நீங்கும்.

இதன் இலைகளை பட்டைகளை நீரில் போட்டு கொதிக்க வைத்து குளிக்கும் நீரில் கலந்து குளித்து வந்தால் உடல் வலி நீங்கும் நரம்புகள் வலிமை பெறும் உடல் நல்ல நிறமாக இருக்கும்.

இந்த மரத்தை வீட்டில் வளர்த்து அதற்கு சந்தனம் குங்குமம் இட்டு வெற்றிலை பாக்கு பழம் வைத்து பட்டு வஸ்திரம் கட்டி பூஜை செய்து வந்தால் கடன் தொல்லை நீங்கும். செல்வ வளம் அதிகரிக்கும். இதன் ஒரு அடி குச்சியை பூஜை அறையில் வைத்து இதே போல செய்தாலும் மேற்கூறிய பயன் கிடைக்கும்..

இந்த மரத்தில் பூஜை அறை நிலவு வெளி வாசல் கதவு நிலவு வடக்கு வாசல் கதவு நிலவு செய்து வைக்க பணம் எதாவது வழியில் சேர்ந்து கொண்டு இருக்கும்.

இந்த மரத்தின் இலைகளை கொண்டு சிறுவர்களுக்கு உணவு ஊட்டினால் குழந்தைகள் படிப்பில் சிறந்து விளங்குபவர்.

ஜாதகத்தில் சந்திர பலம் குறைவாக இருப்பவர்கள் இந்த மரத்தை வீட்டில் வளர்க்கலாம் மிகவும் நன்று. இது சந்திரபகவானுக்கு உகந்த மரம்.






இந்த மரத்தின் கட்டை சந்தன கட்டை போல இருக்கும். இதை சந்தனகட்டை என்று சிலர் விற்பனை செய்வார்கள்.

இந்த மரத்தை கட்டி பிடித்து வேண்டி கொண்டால் பதவிகள் தேடி வரும் என்ற நம்பிக்கை உள்ளது. இந்த மரத்தை வீட்டில் அக்னி மூலையில் வைத்து வளர்க்க சிறப்பு..

இந்த மரம் பூரம் நட்சத்திரக்காரர்களுக்கு மிகவும் உரியது. தங்கள் நட்சத்திரம் வரும் நாளில் வீட்டில் அல்லது குல தெய்வ கோயில்களில் நட்டு அடிக்கடி சென்று தண்ணீர் ஊற்றி வளர்த்து வந்தால் அவர்கள் வாழ்க்கை சிறப்பாக இருக்கும். இந்த மரம் சிவன் கோவில்களில் தல விருட்சமாக உள்ளது.

## மந்திரம் மற்றும் ஸ்ரீ வித்யைக்கு உள்ள வேறுபாடு

உலகில் உள்ள பொருள்களை இருவகை 1. அசையும் பொருள், 2. அசையாப்பொருள்.

அசைபவை உயிர்கள். அசையாதவை ஜடப் பொருள்கள். இவ்வாறுள்ள எல்லாப் பொருள்களையும் இடமாகக் கொண்டு அவற்றை இயக்கி வைக்கிற அதி தேவதைகள் உண்டு. அந்த அதிதேவதைக்கு மந்திரங்கள் உண்டு. மந்திரங்களால் ஆகாத காரியம் இல்லை.

இம்மந்திரங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது ஸ்ரீ வித்யை என்கிறது லலிதா சகஸ்ர நாமம்.

பெண் தெய்வங்கட்குரிய மந்திரங்களை ஸ்ரீ வித்யை என்பர்.

ஆண் தெய்வங்கட்குரிய மந்திரங்களை மந்திரம் என்றே குறிப்பிடுவர்.

# மந்திரமும் விதையும்

ஒவ்வொரு மந்திரமும் ஒவ்வொரு தெய்வத்தின் சொரூபம் ஆகும். ஒவ்வொரு மந்திரத்திலும் உயிர்ச் சக்தி உறங்கிக் கிடக்கின்றது. அவை விதைகளைப் போன்றவை. விதை முளைத்துப் பலன் தர வேண்டுமானால் அதற்கான சூழ்நிலைகள் தேவையல்லவா?

### ஒரு விதை முளைத்து பலன் கொடுக்க வேண்டுமானால்

- உரிய காலம் வேண்டும்.
- உரிய நிலம் வேண்டும்.
- பக்குவப்பட்ட விதையாக இருக்க வேண்டும்.
- பழக்கப்பட்டவன் விதைக்க வேண்டும்.
- நல்ல கைராசி வேண்டும்.
- விதை முளைக்கும் போது கூடவே களைகள் தோன்றும். அவற்றைக் களையவேண்டும்.
- ஆடு மாடுகள் மனிதர்கள் போன்ற உயிர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும்.
- நீர் பாய்ச்சி உரம் போட வேண்டும்.
- நன்கு விளைந்ததும் பாதுகாப்பாக வீட்டில் கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.

### மந்திரங்கள் வாயிலாக சரியான பலன் கிடைக்கவேண்டுமானால்

- மந்திரங்களையும் உரிய காலத்தில் ஜெபிக்க வேண்டும்.
- அவை மனத்தில் பதியும்படி மனநிலை அமைய வேண்டும்.
- ஒரு குருவின் மூலமாகப் பெற வேண்டும்.
- சந்தேகம் போக வேண்டும்.
- அவ்வப்போது குருவைத் தரிசித்து மந்திர ஜெபத்துக்கு வலுவை ஊட்டிக் கொள்ள வேண்டும்.
- மந்திரம் பலன்தர ஆரம்பிக்கும்போது அகங் காரம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## மந்திர உபாசனை பலன் தரும் காலம்

மந்திரம் உபாசனை செய்யும் ஒருவர் தொடர்ந்து 14 வருடம் ஒரு குறிப்பிட்ட தெய்வ மந்திரத்தை இடைவிடாமல் ஜெபித்து வருகிறாரோ அவருக்கு அந்த மந்திரம் நிச்சயமாகப் பலன் கொடுக்கும்.

எனக்கு மந்திரம் பலிக்கவில்லை, பலன் தரவில்லை என்று மந்திர ஜெபத்தை விட்டு விடுபவர்கள் பாவிகள். மந்திரம் பலிப்பதுபோலப் பலித்து ஆளையும் கீழே தள்ளிவிடும்.

இவற்றையெல்லாம் தெரிந்து வைத்துக் கொண்டு நம்பிக்கையோடும், முயற்சியோடும் பக்தியோடும் உபாசிக்கிறவனே நல்ல உபாசகன்.



# ஃ உயிரை மாய்க்கப் பயன்படுத்தப்பட்ட தமிழ் எழுத்து

ஆயுத எழுத்துக்களான ஃ, அங், அம் ஆகிய மூன்றுமே எழத்துக்களுக்கு மூலமாதலால் மூல எழுத்துக்கள் என்றும் அழைக்கப்படுகின்றது. இந்த அக்(ஃ)ம் அம்மும் சேர்ந்தே அகமான உள் உருவாகின்றது. அக்(ஃ)ம் அங்கும் சேர்ந்தே மாயையான வெளி உருவாகின்றது. அங்கும் அம்மும் சேர்ந்து அங்கம் உருவாக காரணமாக அமைகின்றது.

அக்(ஃ)+அம்=அகம்(உள்)

அக்(ஃ)+அங்=அகங்(மாயைவெளி)

அங்+அம்=அங்கம்

ஆயுத எழுத்து ஃ, இதன் உச்சரிப்பு அக்கனா ஆகும். இதன் முதல் புள்ளி "ம்" என்ற பரத்தை குறிக்கும். இரண்டாவது புள்ளி "வ்" என்ற பஞ் சபூத உற்பத்தி ஸ்தானமாகும். மூன்றாவது புள்ளி "உ" என்ற ஆகாயத்தின் எழுத்தாகும். இவ்வாறே மூல எழுத்தாக ஆயுத எழுத்து "ஃ" தோன்றியது. இவற்றின் ஆயுத எழுத்தான 'ஃ' என்பதின் பொருள் கற்பித்தல் ஆகும். இதனுடைய சிறப்பு என்னவெனில் அக்காலத்தில் 'வடக்கிருந்தல்' என்ற நிகழ்வு உண்டு.

அதாவது வயது முதிர்ந்தோர் மற்றும் பக்தியினாலோ தன் வீட்டை விட்டு வெளியேறி வடக்கேயிருக்கும் ஏதாவது ஒரு ஸ்தலத்தை நோக்கி நடந்து சென்று அத்தலத்திலேயே தங்கி உடலை வருத்தி தன் உடலை விட்டுவிடுவர். பக்குவமடைந்த சிலர் அன்ன ஆகார நீரின்றி தொடர்ந்து ஃ(அக்கனா) என்று திரும்ப திரும்ப உச்சரித்து உயிரை விடுவர். அதற்குப் பெயரே வடக்கிருத்தல் எனப்படும்.

அதாவது ஃ (அக்கனா) என்று தொடர்ந்து மூன்று மணி நேரம் உச்சரித்தாலே உடலை விட்டு உயிர் நீங்கிவிடும். இதை குறைந்த அளவு உச்சரித்தால் இரத்த அழுத்தம் குறை யும். சித்தர்களுக்கு சேவை செய்யும் சீடர்கள் வாழ்க்கை போதும் என்று நினைத்தால் அக்கனா அக்கனா என மூன்று மணி நேரம் உச்சரித்து உடலைவிடுவர். சிலர் சமாதியடையும் முன்பும் இந்த எழுத்தை உச்சரித்து சமாதி அடைவர்.

மேலும் இந்த ஆயுத எழுத்தான அஃகனாவை உச்சரித்து உயிர்நீத்தார் யாவரும் அடுத்த பிறவியில் மனித பிறப்பாகவே பிறந்து அதுவும் ஒரு அவதாரமாகவோ அல்லது ஞானியாக வோஅவதரிப்பர் என்பது இதன் சிறப்பு ஆகும். எனவே தான் இதை முதன்மை எழுத்து என்றும் புனித எழுத்து என்றும் அழைக்கப்படுகின்றது. வள்ளலார் தனது அகவலில் இந்த எழுத்தை திருநிலை என்று குறிப்பிட்டுள்ளார்.

தவறான நோக்கத்துடன் தற்கொலைக்கு இந்த அட்சரத்தை பயன்படுத்தினால் உயிர் பிரியாது. அப்படி பயன்படுத்தும் பட்சத்தில் ஞான வாழ்க்கைக்கு கொண்டு செல்லுமே தவிர உடலைவிட முடியாது.




ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!

# கண்ணழகு

திருவரங்கத்தில் ராமானுஜர் வாழ்ந்து வந்த காலம். தனுர்தாசர் என்ற ஒரு மெய்க்காப்பாளரும் அதே திருவரங்கத்தில் வாழ்ந்து வந்தார்.

அவரது மனைவிக்கு ஹேமாம்பாள் என்று பெயர். அவள் பேரழகி. அந்தப் பெண் எப்போது வெளியே சென்றாலும், தனுர்தாசர் அவளுக்குக் குடை பிடித்துக் கொண்டு பின்னால் செல்வது வழக்கம்.



உச்சி வெயிலில் மனைவிக்குக் குடை பிடித்துச் செல்லும் தனுர்தாசரை ஒருநாள் ராமானுஜர் பார்த்தார். தனுர்தாசரை அழைத்து, “ஏன் அப்பா உன் மனைவிக்கு இப்படிக் குடை பிடித்துக் கொண்டு செல்கிறாய்?” என்று கேட்டார் ராமானுஜர்.

“அவளது கண் அழகைப் பாருங்கள்! அந்த கண்களுக்கு நான் அடிமை! அந்தக் கண்ணழகில் மயங்கியதால் தான் அவளுக்குக் குடைபிடித்துக் கொண்டு பின்னால் செல்கிறேன்!” என்று விடையளித்தார் தனுர்தாசர்.

“மனைவியிடம் நிச்சயமாக அன்பு காட்ட வேண்டும். ஆனால் இவனது அன்பு கிட்டத்தட்ட வெறி போல் மாறிவிட்டது. இது நல்லதல்ல. இவன் மனைவியிடம் காட்டும் இந்த அளவுகடந்த அன்பை இறைவனிடம் காட்டினால், இறையருளுக்குப் பாத்திரம் ஆகலாமே!” என்று சிந்தித்தார் ராமானுஜர்.

தனுர்தாசருக்குப் புரியும் விதத்தில் அவருக்கு இவ்விஷயத்தை எடுத்துச் சொல்லி அவரைத் திருத்த வேண்டும் என்று முடிவெடுத்தார்.

எனவே ராமானுஜர் தனுர்தாசரை பார்த்து, “உன் மனைவி பெரிய கண்ணழகி என்கிறாயே! அவளது கண்களை விட அழகிய கண்களைக் காட்டினால் என்ன செய்வாய்?” என்று கேட்டார்.

“அப்படி என் மனைவியின் கண்களை விட அழகிய கண்கள் இருந்தால், இனி அந்தக் கண்களுக்கு நான் அடிமை!

www.aanmeegamalar.com







அந்தக் கண்களைஎனக்குக் காட்டுவீர்களா?” என்று ஆசையுடன் கேட்டார் தனுர்தாசர்.

“என்னுடன் வா!” என்று தனுர்தாசரை அழைத்துச் சென்ற ராமாநுஜர், திருவரங்கத்தில் பள்ளிகொண்டுள்ள அரங்கன் முன்னே. அவரை நிறுத்தி, “இந்தக் கண்களைப் பார்!” என்றார்.

அடுத்த நொடியே அரங்கனின் கண்ணழகுக்கு மயங்கி, அவருக்கு அடிமையானார் தனுர்தாசர்.

அவர்மட்டுமின்றி, அவரது மனைவியான ஹேமாம்பாளும் அரங்கனுக்கு அடியவள் ஆனாள்.

தனுர்தாசரும் ஹேமாம்பாளும் முறையே பிள்ளை உறங்காவில்லி தாசர், பொன்நாச்சியார் என்ற பெயரோடு ராமாநுஜருக்குச் சீடர்களானார்கள்.

அதன்பின் அரங்கனின் ஒவ்வொரு புறப்பாட்டிலும் கையில் வாளோடு பெருமாளுக்கு மெய்க்காப்பாளராக உடன்செல்லத் தொடங்கினார் பிள்ளை உறங்காவில்லி தாசர்.

இந்த அதிசயத்தைக் கண்ட சில அடியார்கள் ராமாநுஜரிடம், “அரங்கனின் கண்ணழகைக் காட்டியே இவரை நீங்கள் திருத்தி விட்டீர்களே! இறைவனின் கண்ணழகுக்கு அவ்வளவு சிறப்பு உண்டா?” என்று வியப்புடன் கேட்டார்கள்.

அதற்கு ராமாநுஜர், “அதில் என்ன சந்தேகம்? எல்லாமனிதர்களுக்கும் அடிமனதில் இறைவன் மீது அன்பு என்பது இருந்தேதீரும். ஓர் உதாரணம் சொல்கிறேன். ஒரு மகன் இளம் வயதிலேயே தன் தாயைப் பிரிந்து விடுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். பல வருடங்கள் கழித்துத் தற்செயலாகத் தன் தாயை அவன் சந்திக்கிறான். அந்தப் பெண் தனது தாய் என்பதை இவன் அறியாத போதும், இவனுக்குத் தன்னை அறியாமல் அவள் மீது ஓர் அன்பு வரும் அல்லவா? அதுபோலத் தான் இறைவனும் நமக்கெல்லாம் தாய் போன்றவன்.

ஊழிக் காலத்தில் ஆலிலை கண்ணனாக வந்து நம்மை எல்லாம் அவன் வயிற்றில் வைத்துச் சுமந்தவன் அல்லவா அவன்?

ஒரு தாய் குழந்தையை வயிற்றில் சுமந்து காப்பது போல் நம் அத்தனை பேரையும் வயிற்றில் சுமந்து காத்திருக்கிறான் இறைவன்.

எனவே தான் இறைவனை பற்றிஅறியாதவனாக இருந்தாலும், பக்தியே அடி யோடு இல்லாதவனாக இருந்தாலும் கூட, அந்த மனிதனும் இறைவனின் திருவடிவத்தைக் காணும் போது, தன்னை அறியாமல் ஆழ்மனதில் இருந்து இறைவனை நோக்கி அன்பு என்பது ஏற்படும் என்றார்.

# குருபெயர்ச்சி பலன் 2023

நவக்கிரகங்களில் குருபகவான் சுபக்கிரகம் ஆவார். வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசிய மான தனம் (பணம்) எனும் செல்வத்தை தருபவர். திருமணம், கல்வி, மாங்கல்யம், குழந்தை செல்வம், அறிவாற்றல், பொன் போன்றவற்றை தருபவர் ஸ்ரீ குருபகவன். எப்படிப்பட்ட தோஷங் களையும், தடைகளையும் தன்னுடைய பலத்தாலும், பார்வையாலும் நிவர்த்தி செய்யும் சக்தி குருபகவானுக்கே உண்டு.

22.04.2023 சனிக்கிழமை, சித்திரை–09 ஆம் நன்னாளன்று இரவு 11.27 மணி அளவில் ஸ்ரீ குருபகவான் மீன ராசியிலிருந்து மேஷ ராசிக்கு செல்கிறார்.

(இந்த ராசிப்பலன்கள் யாவும் பொதுப்பலன்கள் ஆகும். ஒருவரின் ஜாதகத்தில் குருபகவான் பலமாகவோ, யோகம் தரும் இடத்தில் அமர்ந்து இருந்தாலோ தீய பலன்கள் குறைந்து நன்மைகள் அதிகரிக்கும்)



## மேஷம்

### (மன சஞ்சலம் தரும் ஜென்ம குரு)



ஸ்ரீ குருபகவான் உங்கள் ஜென்ம ராசிக்கு தான் வருகிறார். ஜென்ம குருவால் மனசஞ் சலம், வீண் அலைச்சல், குடும்பத்தில் குழப்பம் ஏற்படும்.தொழிலில் போட்டியும், பின்னடைவும் ஏற்படும். மேலதிகாரிகளின் பகை விரும்பத்தகாத இடமாற்றம், எதிலும் டென்சன் ஏற் படும். கடன் தொல்லை, உடல் சோர்வு, தொலை தூர பயணம் ஏற்படும். எதிலும் கவனமாக இருக்க வேண்டும். சனிபகவானின் சஞ்சாரம் தங்களுக்கு சாதகமாக உள்ளது. கவலை வேண்டாம். ஸ்ரீ நவக்கிரக எந்திரத்தை பூஜித்து வர துன்பங்கள் குறையும்.

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
www.aanmeegamalar.com

## ரிஷபம்

### (சுப செலவுகளை தரும் குரு)



12ஆம் இடமான விரைய (செலவு) ஸ்தானத்தில் குருபகவான் சஞ்சரிக் கிறார். விரைய குருவால் உங்களுக்கு சுபசெலவுகள் ஏற்படும். உங்கள் வீட்டில் திருமண வைபோகமோ, வீடு கட்டுதலோ, வாகனம் வாங்குதலோ போன்ற நல்ல காரியங்களுக்கு செலவுகள் செய்ய நேரிடும். அதே சமயம் தொழிலில் பின்னடைவு, கடன் வாங்குதல், எதிரிகளின் தொல்லை, நோயின் தொல்லை, மருத்துவ செலவு வீண் சண்டை சச்சரவு,

கோர்ட்டு கேஸ் வம்பு வழக்கு போன்ற தீய பலன்களும் ஏற்படும். ஒருசிலர் வெளிநாடு செல்லக்கூடும். எது எப்படி இருந்தாலும் பணம் உங்கள் கையை விட்டு கரையும். ஸ்ரீ குபேர தனாகர்ஷண எந்திரம் அல்லது ஸ்ரீ மஹாம் ருத்யுஞ்சய எந்திரத்தை பூஜித்து வர சிரமங்கள் குறையும்.

## மிதுனம்

### (லாப குரு)



11ஆம் இடமான லாப ஸ்தானத்தில் தேவகுரு சஞ்சரிக்கிறார். தனக் காரனான குருபகவான் லாபம் தரும் இடத்தில் சஞ்சரிப்பதால் தனலாபம், பொன் பொருள் சேர்க்கை ஏற் படும். தொழிலில் வெற்றி, நல்ல லாபம் கிடைக்கும். புதியதாக தொழில் தொடங்குவீர்கள். பதவி உயர்வு, சம்பளஉயர்வு ஏற்படும். வேலைக்காக காத்திருப்பவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். காதலில் வெற்றியும், திருமண யோகமும் அமையும். புத்திர சம்பத்து, வீடு மனை வாகன யோகம் அமையும். புகழ் செல்வாக்கு உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், உற்சாகமும் ஏற்படும். கடன் அடைபடும். மொத்தத்தில் இந்த குருபெயர்ச்சியில் பலவித லாபங்களுடன் நன்மைகளும் பொருளாதார முன் னேற்றமும் ஏற்படும். ஸ்ரீ குபேர தனாகர்ஷண எந்திரத்தை பூஜித்து வர நன்மைகள் பன்மடங்கு பெறுகும்.

## கடகம்

### (பதவியை பறிக்கும் குரு)

பத்திலே குரு பதவியை பறிக்கும் என்ற ஜோதிட சொல்லுக்கு ஏற்ப தொழிலில் பல பிரச்சனைகள் ஏற்படும். தொழிலில் நஷ்டம், பின்னடைவு ஏற்படும். கூட்டுத் தொழிலில் பிரச்சனைகள் ஏற்படும். மொத்தத்தில் யார் எந்த தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் பல பிரச்சனைகளை சந்திக்க நேரிடும். பணமுடக்கம், வீண்



விரையம், வீடு, வாகனத்தால் செலவு, மருத்துவச் செலவு ஏற்படும். காதலில் தோல்வி, திருமணம் தள்ளி போகுதல் நடைபெறும். யாரையும் நம்பி ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம். கோர்ட் கேஸ் என்று அலைய வேண்டி இருக்கும். பெண்களுக்கு அவப்பெயர் ஏற்படும். கணவன்மனைவிக்குள் சண்டை சச்சரவு வரும். உடல் நிலையில் பாதிப்பு ஏற்படும். ஸ்ரீ குபேர தனாகர்ஷண எந்திரத்தை பூஜித்து வர துன்பங்கள் குறையும்.

## சிம்மம்

### (பாக்கியம் தரும் குரு)



ஓடிப்போனவனுக்கு ஒன்பதா மிடத்து குரு என்பார்கள். இந்த ஒன்பதாமிடத்தில் குருபகவான் நீங்கள் நினைத்ததை எல்லாம் நடத்தி வைக்கப் போகிறார். இந்த ஒரு வருடம் தங்களுக்கு பொற்காலமாகும். தொழிலில் நல்ல முன்னேற்றம், லாபம் ஏற்படும். சிலர் புதிய தொழில் தொடங் குவீர்கள். பொன், பொருள், வாகனம் சேரும். சிலர் வீடு மனை வாங்குவீர்கள். தள்ளிப்போன திருமணம் கைகூடும். காதலில் வெற்றி, புத்திர சம்பத்து ஏற்படும். வேலையில்லாவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு அமையும். பெரிய மனிதர் களின் ஆதரவு, தெய்வ தரிசனம் கிடைக்கும். நோய் கட்டுக்குள் அடங்கி இருக்கும். இருப்பினும் தங்களுக்கு 7ல் சனி பகவான் இருப் பதால் உடலில் சோர்வும், மன உலைச்சலும் அவ்வப் போது வரும். ஸ்ரீ நவக்கிரக எந்திரத்தை பூஜித்து வர நன்மைகள் மேலும் பல பெருகும்.

## கன்னி

### (தோல்வி, கஷ்டம் தரும் அஷ்டம குரு)

8ஆம் இடமான அஷ்டம ஸ்தானத்தில்குரு பகவான் அமர்வது நல்லதல்ல. எதிலும் கவனம் தேவை. எடுத்த செயல் எல்லாம் தோல்வியில்




ஜோதிடரத்னா ஆன்மிகசெம்மல் சௌமியன்
**சித்தர் மகன். Dr.L.சீனிவாசன் MA., D.A., S.M.P.,**
ஸ்ரீதண்டபாணி ஆஸ்ரம வாலைச்சித்தர் அறக்கட்டளை,
ஸ்ரீ தண்டபாணி ஆஸ்ரமம், மலை ஏறும் வழி,
முலைப்பால் தீர்த்தம் அருகில், திருவண்ணாமலை. போன்:
04175-227893 Mob & Whatsapp: +91-9894803009

முடியும். எப்போதும் டென்ஷனாகவே இருப்பீர்கள். சோம்பல், தூக்கம், நோய் நொடி உங்களை ஆட்கொள்ளும். மனதை தளர விடாதீர். உண்மையான பக்தியின் மூலம் இந்த சோதனைகளை நீங்கள் வெல்லமுடியும். தொழிலில் மட்டுமல்ல, திருமணம், வேலைவாய்ப்பு என அனைத்திலும் இழுபறிதான். வீடு, வாகனம் என அனைத்திலும் வீண் செலவு ஏற்படும். உடல் நிலை கோளாரால் மருத்துவ செலவு ஏற்படும். கடன் தொல்லை, எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும். புதிய தொழிலுக்கு இப்போது ஏதும் முயற்சிக்க வேண்டாம். ஸ்ரீ சனிபகவானின் சஞ்சாரத்தால் அனைத்தையும் சமாளிப்பீர்கள். ஸ்ரீ நவக்கிரக எந்திரம் அல்லது ஸ்ரீ மஹாம்ருத்யுஞ்சய எந்திரத்தை பூஜித்து வர துன்பங்கள் குறையும்.



## துலாம்

### (வெற்றிமேல் வெற்றி தரும் குரு)



7ஆம் இடமான களத்திரம், கூட்டுத்தொழில், மக்கள் சக்தி, திருமணம், காமம் ஆகிய ஸ்தானத்தில் குருபகவான் சஞ்சரிக்கிறார். குருபகவானின் பார்வை உங்களுக்கு கிடைத்திருக்கிறது. இது மிகவும் விசேஷமாகும். குருபகவானின்பார்வையில் அனைத்திலும் முன்னேற்றமும், வெற்றியும் உண்டாகும். குரு கூட்டுத் தொழில் சிறக்கும். பதவி உயர்வு, சம்பள உயர்வு, ஏற்படும். விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் கிடைக்கும். நண்பர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிட்டும். கணவன், மனைவி உறவு சிறக்கும். காதலில் வெற்றி உண்டாகும். திருமணம் கை கூடும். வீடு, வாகனம், பொன், பொருள், பணம் சேரும். சிலர் வெளிநாடு செல்வீர்கள். கோர்ட்டு கேஸ் உங்களுக்கு சாதகமாக முடியும். எல்லா முயற்சிகளும் வெற்றியை தரும். ஸ்ரீ குபேர தனாகர்ஷண எந்திரத்தை பூஜித்து வர நன்மைகள் பெருகும்ஞ்

## விருச்சிகம்

### (கடன், எதிர்ப்பு, நோய் மற்றும் தோல்விகளை தரும் குரு)

6ஆம் இடமான கடன், எதிர்ப்பு, நோய் ஆகிய ஸ்தானத்தில் குருபகவான் அமர்வது அவயோகத்தை தரும். எதிலும் எதிர்ப்பு ஏற்படும். கடன் தொல்லை, நோயின் தொல்லை, தேவையில்லாத வீண் பிரச்சனைகள் வரும். பணம் இழப்பு ஏற்படும். தொழிலில் பின்னடைவு, நஷ்டம் ஏற்படும். வீடு வாகனத்தால் செலவு, மருத்துவ செலவு, பிள்ளைகள் வகையில் செலவு என கையில் வைத்திருக்கும் காசை கரைத்துவிடும். புதிதாக கடன் வாங்க வேண்டி வரும். வேலை செய்யுமிடத்தில் பகை, எதிர்ப்பு உண்டாகும். அர்த்தாஷ்டம சனி பகவானால் மேலும் பல தொல்லைகள் ஏற்படும். ஸ்ரீ நவக்கிரக எந்திரத்தை பூஜித்து வர துன்பங்கள் குறையும்.



## தனுசு

### (அதிர்ஷ்டம் தரும் குரு)



தங்கள் ராசி நாதனான ஸ்ரீ குருபகவான் அதிர்ஷ்டம் தரும். 5ஆம் இடத்திலிருந்து உங்களை பார்வையிடுகிறார். எடுத்த முயற்சிகளில் எல்லாம் வெற்றி மேல் வெற்றி கிடைக்கும். அதிர்ஷ்டலட்சுமி உங்களிடம் குடிக்கொள்வாள். பொன், பொருள், பணம், வீடு, வாகனம், மனை என சேரும். தொழிலில் நல்ல இலாபமும், வெற்றியும் கிடைக்கும்.சிலர் புதிதாக தொழில் துவங்க நேரிடும். கடன் அடைப்படும். கோர்டு கேஸ் வழக்குகளில் வெற்றி உண்டாகும். திருமணம் கைகூடும். காதலில் வெற்றி, குழந்தை பாக்கியம் ஏற்படும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். சிலர் வெளிநாடு செல்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியும், ஒற்றுமையும் அதிகரிக்கும். ஸ்ரீ நவக்கிரக எந்திரத்தை பூஜித்து வர நன்மைகள் மேன்மேலும் பெருகும்.

## மகரம்

### (நடு நிலை தரும் குரு)



4ஆம் இடமான வீடு, நிலம், மனை, வாகனம் ஆகிய சுகஸ்தானத்தில் குருபகவான் சஞ்சரிக்கிறார். 4ஆம் இடம் குருபகவானுக்கு கோட்சாரப்படி ஏற்ற இடம் இல்லை என்றாலும் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்த மாட்டார். அதே சமயம் நல்லதையும் செய்யமாட்டார். பணவரவில் மந்த நிலை, தொழிலில் மந்த நிலை என அனைத்து முயற்சிகளிலும் மந்தநிலை இருக்கும். வீடு, வாகனம், நிலம், மனை போன்றவற்றில் செலவுகள் ஏற்படும். ஒரு சிலர் இவற்றை விற்கவும் செய்வீர்கள். புதிய பொன்




ஆபரணங்கள் வாங்குவது கடினம். திருமணம் தள்ளிப் போகும். தாயிடம் மனவேற்றுமை ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு இழுபறியில் இருக்கும். தொலைதூர பயணம் ஏற்படும். 71/2 ஆண்டு பாத சனிபகவானின் தொல்லையும் இருக்கும். ஸ்ரீ நவக்கிரக எந்திரத்தை பூஜித்து வர மந்த நிலை நீங்கி சில நன்மைகள் நடக்கும்.

## கும்பம்

### (தைரியம், சகோதரம், வீரிய ஸ்தானம்)



சகோதரம், வீரியம் ஆகிய ஸ்தானத்திற்கு குருபகவான் வருகிறார். 3ஆமிடம் என்பது குருபகவானுக்கு ஏற்ற இடம் இல்லை. எதிலும் கவனம் தேவை. எதையும் நிறுத்தி நிதானமாக யோசித்து முடிவு எடுங்கள். தொழிலில் மந்த நிலை இருக்கும். பண வரவு தடைபடும். நோயின் தொல்லை, கடன் தொல்லை இருக்கும். செலவுகள் அதிகரிக்கும். திருமணம் தள்ளி போகும். கணவன்மனைவிக்குள் பிரச்சனை ஏற்படும். உடலில், மனதில் சோர்வு ஏற்படும். வேலை செய்யுமிடத்தில் பிரச்சனைகள் ஏற்படும். பதவி உயர்வு, சம்பள உயர்வு தடைப்படும். 71/2 ஆண்டு ஜென்ம சனிபகவானின் தொல்லையும் இருக்கும். ஸ்ரீ குபேர தனாகர்ஷண எந்திரத்தை பூஜித்து வர சிரமங்கள் குறையும்.

## மீனம்

### (பொற்காலம் தரும் குரு)



2ஆம் இடமான தனம், குடும்பம், வாக்கு, லட்சியம் ஆகிய ஸ்தானத்தில் தங்கள் ராசிநாதனான பொன்னவன் குருபகவான் சஞ்சரிக்கிறார். இந்த குருபெயர்ச்சியால் நீங்கள் பட்டு வரும் கஷ்டங்கள் நீங்கும். தொழிலில் நல்ல முன்னேற்றமும், லாபமும் ஏற்படும். சிலர் புதிய தொழில் தொடங்குவீர்கள். பதவி உயர்வு, சம்பள உயர்வு, விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் ஆகியவை கிடைக்கும். நல்ல வேலை வாய்ப்பு, திருமண யோகம், புத்திரபேறு ஏற்படும். சிலர் வெளிநாடு செல்வீர்கள். பணம், பொன், பொருள், வாகனம் சேரும். சிலர் வீடு, மனை வாங்குவீர்கள். கடன் அடைபடும். சனிபகவானால் பல தடைகள் இருப்பினும் ஸ்ரீ குருபகவானால் பல நன்மைகள் ஓராண்டிற்கு கிடைக்கும். ஸ்ரீ குபேர தனாகர்ஷண எந்திரத்தை பூஜித்து வர நன்மைகள் மேலும் பெறுகும்.

குறிப்பு: இந்த ராசிப்பலன்கள் யாவும் பொதுப்பலன்கள் ஆகும். ஒருவரின் ஜாதகத்தில் குருபகவான் பலமாகவோ, யோகம் தரும் இடத்தில் அமர்ந்து இருந்தாலோ தீய பலன்கள் குறைந்து நன்மைகள் அதிகரிக்கும்.

# ஆன்மிகத் தகவல்களை

**எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்**

**ஆன்மிகமலர்** மெயில்

**புத்தகத்தில்** (e-book)

**வெளியிட்டு வருகிறோம்...**

eBook DOWNLOAD

eBook

DOWNLOAD

eBook DOWNLOAD

free

இதுவரை வெளிவந்த

# 160 க்கும் மேற்பட்ட

**இதழ்களை**




# aanmeegamalar.com

**இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.**



# வடக்கு நோக்கிய முருகன் தெற்கு நோக்கி வழிபட்டால் பில்லி சூனிய பிரச்சனை தீரும்

கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் சீர்காழி இடையே புத்தூர் பழையாறு சாலையில் கிழக்காக ஒரு கிலோமீட்டர் தூரத்தில் திரு மயிலாடி திருத்தலம் அமைந்துள்ளது.

இங்கு முருகப்பெருமான் வடதிசை நோக்கி தவக் கோலத்தில் அருள்பாலிக்கிறார். முருகன் அருள்பாலிக்கும் தலம் என்றாலும், மூலவர் சிவ பெருமானே.

திருக்கயிலையில் உமாதேவியோடு சிவபெருமான் வீற்றிருந்தார். அப்போது அவர்களிடையே ஒரு விவாதம் உண்டானது. கோபத்தில் சிவன் அங்கிருந்து மறைந்து போனார்.

ஈசனை காணாது சக்திதேவி தேடத் தொடங்கினாள். மயில் உருவம் கொண்டு பல இடங்களில் தேடிய பார்வதி, இறுதியாக கண்ணுவாசிரமம் என்றழைக்கப்பட்ட இத்தலத்திற்கு வந்தார்.

பின்னர் ஈசனை நினைத்து துதித்தார். இதையடுத்து சிவ பெருமான், கண்ணுக்கு இனிய எழிற் கோலத்துடன் சுந்தரலிங்கமாக வெளிப்பட்டு உமாதேவிக்கு காட்சி தந்தார்.

அந்த வடிவத்தைக் கண்டு மயங்கிய அம்பாள் தோகை விரித்து ஆனந்த நடனமாடினாள். அது முதல் இத்தலத்திற்கு ‘திருமயிலாடி’ என பெயர் உண் டாயிற்று.

இத்தலத்தில் குமரக்கடவுளால் உருவான தீர்த்தம் புஷ்பகாரண்ய தீர்த்தம் என்ற பெயரில் ஆலயத்தின் எதிரில் உள்ளது.

இத்தலத்தில் உள்ள முருகன்வடக்கு நோக்கிய படி காட்சிதருகிறார், இந்த முருகனை தெற்குமுகமாக நின்று வணங்கினால், பில்லி, சூனியம், பெரும்பகை அகலும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.

மேலும் இத்தலத்தின் கருவறைக் கோட்டத்தில் தெற்கில் தட்சிணாமூர்த்தி உள்ளார்.

இதுபோன்று தமிழகத்தில் எந்த ஆலயத்திலும் தெற்கு நோக்கி தட்சிணாமூர்த்தி காட்சி தருவதில்லை.

இத்தலத்தில் மட்டுமே காணக் கிடைக்காத விதமாக பத்மாசன திருக் கோலத்தில் தட்சிணாமூர்த்தி அருள்பாலிப்பது சிறப்பு.

மாதம் தோறும் 2 புத்தகங்கள்




ஆன்மீக e-magazine

படியுங்கள் இலவசமாக

aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# கிரீடத்துடன் காட்சி அளிக்கும் அபூர்வ தட்சிணாமூர்த்தி

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் இருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ள தலம் இலுப்பைக்குடி. இறைவன் திருநாமம் தான்தோன்றீஸ்வரர். இறைவியின் திருநாமம் சவுந்தர்ய நாயகி.

சித்தர்களில் ஒருவரான கொங்கணர், மூலிகைகளை பயன்படுத்தி இரும்பைத் தங்கமாக மாற்றினார். தங்கத்தை ஐநூறு மாற்றுக்களாக தயாரித்த அவர் மேலும் அதிக மாற்று தங்கம் தயாரிக்க வேண்டும் என விரும்பி அதற்கு அருள்தருமாறு சிவபெருமானை வழிபட்டார்.

அவருக்கு காட்சி தந்த சிவன் இலுப்பை மரங்கள் நிறைந்த இப்பகுதியில் பைரவரை வணங்கி, தங்கத்தை ஆயிரம் மாற்றாக உயர்த்தி தயாரிக்க அருள் செய்தார். அதன்படி கொங்கணர் பைரவரை வழிபட்டு, ஆயிரம் மாற்று தங்கம் தயாரித்தார்.

அந்த தங்கம் ஜோதி ரூபமாக மின்னியது. அதை அவர் எடுக்க முயன்றபோது, அந்த ஜோதி பூமிக்குள் புதைந்து சிவலிங்கமாக காட்சியளித்தது.

பிரகாசமான ஜோதியில் இருந்து தோன்றியதால் சுவாமிக்கு சுயம்பிரகாசேஸ்வரர் என்றும் தான்தோன்றீஸ்வரர் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. இலுப்பை வனத்தின் மத்தியில் சிவன் காட்சி தந்த தலமென்பதால் இலுப்பைக்குடி என்று இவ்வூர் அழைக்கப்படுகிறது.

இத்தலத்தில் எழுந்தருளி இருக்கும் தட்சிணாமூர்த்தி தலையில் கிரீடம் அணிந்து காட்சி கொடுப்பது, வேறு எந்த தலத்திலும் நாம் காணமுடியாத அரிய காட்சியாகும்.

நுண்ணிய வேலைப்பாடுகள் கொண்ட குட்டி விநாயகர்

சுவாமி சன்னதி முன்மண்டபத்தில் உள்ள தூணில் ஒரு அங்குல அளவே உள்ள குட்டி விநாயகர் சிற்பம் இருக்கிறது. இந்த சிலையில் கண் இமை, விரல் நகங்களும் துல்லியமாகத் தெரியும்படி நேர்த்தியாக சிற்ப வேலைப்பாடு செய்யப்பட்டிருப்பது தனிச் சிறப்பாகும்.





www.aanmeegamalar.com

# எலுமிச்சை மாலையை என்ன செய்யலாம்



பெரும்பாலான அம்மன் கோவில்களில் அம்மனுக்கு எலுமிச்சை மாலை சார்த்துவது வழக்கம், அவ்வாறு சார்த்தும் மாலையில் இருக்கும் அவ்வளவு எலுமிச்சைப் பழத்தை என்ன செய்வது என்று தெரியாமல் விழித்திருப்போம்.

ஆனாலும் ஒருசிலர், கோயிலில் பிரசாதமாக கொடுக்கும் எலுமிச்சம் பழ மாலையை பூஜை யறையில் வைக்க வேண்டும். பழங்கள் கெட்டு விட்டால், ஏதாவது மரத்தினடியிலோ ஆறு, குளம், கிணறு போன்ற நீர்நிலைகளிலோ போட்டுவிட வேண்டும். ஜூஸ் செய்தோ, ஊறுகாய் செய்தோ சாப்பிடக்கூடாது' என்று கூறுவார்கள்.

ஆனால் இதற்கெல்லாம் மகா பெரியவா ஒரு தீர்வை எப்போதோ சொல்லியுள்ளார்.

இறைவனுக்கு சார்த்தப்படும் எலுமிச்சை மாலையை என்ன செய்யலாம் என்று பெரியவா கூறியுள்ள கருத்தை தெய்வத்தின் குரல் என்ற தொகுப்பில் படித்து தெரிந்துக் கொள்ளலாம்.

அந்த தொகுப்பில்...

"என் தந்தைக்கு, ஸ்ரீகாஞ்சி மஹாஸ்வாமிகள் தான் குலதெய்வமே. அவர் எங்கு முகாமிட் டிருந்தாலும், மாதம் ஒருமுறையாவது தரிசிக் காமல் இருக்கமாட்டார்.

(1952–ஆம் ஆண்டு 'வியாஸ பூஜை' ஆடு துறைக்கு அருகிலுள்ள சாத்தனூர் என்ற கிராமத்தில் ('திருமூலர்' சாத்தனூர் என்பார்கள்) எங்கள் கிரஹத்தில்தான் நடைபெற்றது!

அநேக தடவைகள் எங்கள் கிராமத்தில் மகா பெரியவர் முகாமிட்டிருந்தாலும், அந்த முறை மூன்று மாதங்கள் இங்கு தங்கியிருந்தார். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வழக்கம்போல் பெரியவாளை தரிசனம் செய்ய நினைத்தபோது, அவர் ஆந்திர மாநிலம் 'ரேப்பள்ளி'யில் முகா மிட்டிருந்தார். 'ரேப்பள்ளி'க்கு நானும் என் தந்தையுடன் சென்று ஸ்ரீபெரியவரையும், ஸ்ரீசந்திர மௌலீஸ்வரர் பூஜையையும் இரண்டு நாள் தங்கி தரிசனம் செய்தோம்.

மூன்றாவது நாள் என் தந்தை வந்தனம் செய்து, 'அப்ப நான் உத்தரவு வாங்கிக்கொள்ளட்டுமாஞ்'' என்று பெரியவாளிடம் உத்தரவுக்காக பணிந்து நின்றார். உடன் அவர், "ஊருக்குத்தானே நேரே போகிறாய்ஞ்'' என்றார். "ஆமாம்'' என்று என் தந்தை கூறவும், தன் கழுத்திலிருந்த எலுமிச்சம் பழ மாலையை கழட்டி என் தந்தையிடம் கொடுத்து, இன்னும் ஒரு மாலையையும் கொடுத்து, "இதை எடுத்துண்டு போய் ஆத்துல ஊறுகாய் போட்டு, திருவிடைமருதூர் பாடசாலை குழந்தைகளுக்கு கொண்டு போய் கொடுத்துடறியாஞ்'' என்றார்.

என் தந்தை உடனே "பெரியவா உத்தரவு''என்ற படி மாலைகளை பெற்றுக்கொண்டு, சென்னை யில் கூட தங்காமல் சாத்தனூர் வந்து ஊறுகாய் போட்டு, திருவிடைமருதூர் பாடசாலை குழந்தை களுக்கு கொண்டு கொடுத்தார்!

எலுமிச்சம் பழ மாலையைப் பார்க்கும் போதெல் லாம், பெரியவாளின் கருணை முகம்தான் பளிச்சிடும்!

பெரியவா வழியில் நாமும் அம்மனுக்கு சாத்தும் மாலையை இதுபோன்று பலருக்கு பயன்படும் பொருளாக மாற்றி கொடுத்தால் தவறில்லை.

# தூத்துக்குடியில் ஒரு மதுரை மீனாட்சி

தென் தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்ட எல்லையான விளாத்திகுளம் நகரில் குளத்தங்கரை அருகில் அமைந்துள்ளது மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில். மிகவும் தொன்மை வாய்ந்த புராண சிறப்பு கொண்ட இந்த திருக்கோவிலில் அருள்பாலிக்கும் இறைவனின் பெயர் சொக்கலிங்க சுவாமி என்பதாகும்.

அம்பாளின் திருநாமம் மீனாட்சி அம்பாள். ஆலய தீர்த்தம் சிவகங்கை தீர்த்தம், தலவிருட்சம் வில்வமரம். மீனைப்போலவே கண் இமை கொட்டாமல் உலகனைத்தையும் தனது கடாட்சத்தினால் காப்பாற்றி வருபவள் மீனாட்சி அன்னை. உலகனைத்துக்கும் அம்மையும், அப்பனுமாக உள்ளவர் 'மீனாட்சி சுந்தரேசுவரர்'.இவ்விரு சிறப்புகளையும் ஒருங்கே பெற்று மீனாட்சி அம்மன் உடனுறை சந்தரேசுவரர் அமர்ந்து ஆட்சி செய்யும் திருத்தலம் விளாத்திகுளம் ஆகும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் இக்கோவில் அமைந்து இருந்தாலும், விருதுநகர் மாவட்ட எல்லையையும், ராமநாதபுரம் மாவட்ட எல்லையையும் ஒட்டி ஆலயம் அமைந்துள்ளது. ஆதிகாலத்தில் திம்மராஜபுரம் என்ற பெயரில் அழைக்கப்பட்டது.

விளாமரமும், அத்தி மரமும் இணைந்து ஊருக்கு அருகில் உள்ள குளத்தின் கரையில் இருந்ததால் 'விளா அத்தி குளம்' என்பது மருவி, 'விளாத்திகுளம்' என பெயர் பெற்றது.

இவ்வூரில் தேர்ந்த அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் வாரந்தோறும் கால்நடையாகவே மதுரை சென்று மீனாட்சியம்மன், சொக்கநாதரையும் தரிசித்து திரும்புவதை வழக்கமாக கொண்டு இருந்தார்.

நாளடைவில் ஏற்பட்ட தள்ளாத முதுமை காரணமாக அவரால் மதுரைக்குச் செல்ல இயலவில்லை. இருப்பினும், அன்னை மீது கொண்டு இருந்த தாளா பக்தியினால், அன்னையை காண முடியாத ஏக்கத்தில், அவரது இறையருளை பெற வேண்டி நடந்து செல்ல முடியாவிட்டாலும் தவழ்ந்து, தவழ்ந்தாவது மதுரைக்கு செல்வது என்று எத்தனித்தார்.

பக்தனின் முடிவை அறிந்து மனமிரங்கிய அன்னை மீனாட்சி, 'திம்மராஜபுரத்தில் விளாமரமும், அத்திமரமும் சேர்ந்த குளக்கரை அருகே தமக்கும், தனது இறைவனாருக்கும் ஆலயம் அமைக்க வேண்டியும், அந்த இடத்தில் அமர்ந்து தான் அருள்பாலிப்பதாகவும், அங்கே தன்னை காண வரலா என்றும் ஆணையிட்டார். அதன்படி சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பாக அந்த வயோதிக அந்தணரால் கட்டப்பட்டதே இந்தத் திருக்கோவில்.

இந்தத் திருக்கோவிலின் முன் மண்டபம், பெகாடி மரம் மற்றும் மகாமண்டபம் முதலியன பாண்டிய மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டவை ஆகும். அதற்கு அடையாளமாக மீன் சின்னம் காணப்படுகிறது.

எட்டயபுரத்திலிருந்து 18 கிலோ மீட்டர் தொலைவிலும், அருப்புக்கோட்டையிலிருந்து 46 கிலோமீட்டர் தொலைவிலும், தூத்துக்குடியில் இருந்து 48 கிலோமீட்டர் தொலைவிலும் இக்கோவில் அமைந்துள்ளது. மதுரை நெல்லை ரெயில் வழித்தடத்தில் கோவில்பட்டி ரெயில் நிலையத்தில் இருந்து 37 கிலோமீட்டர் தொலைவில் இத்தலம் இருக்கிறது.



www.aanmeegamalar.com

# தில்லியில் ஒரு திருத்தணி







'வடதிருத்தணி', தில்லியிலிருந்து 6 கிமீ தொலைவில் உள்ளது.

தில்லியின் கிழக்கு எல்லையிலிருந்து சுமார் 6 கிமீ தொலைவில் உத்திர பிரதேச மாநிலத்தின் ஒரு பகுதியான சாகிபாபாத், லாஜ்பத் நகரில் அமைந்துள்ள திருக்கோயில் இது. தில்லி மற்றும் அதன் சுற்று வட்டாரத்தில் அருள்மிகு வள்ளி தெய்வானை உடனுறை ஸ்ரீ சுப்பிரமணியர் திருக் கோவில் இது ஒன்றே என்பதால் இதை 'வட திருத்தணி ' என்று போற்றப்படுகிறது.

இந்த வட்டாரத்தில் புலம் பெயர்ந்து வாழ்ந்து வந்த தமிழர்களின் உதவியாலும் திரு சுவாமிநாதன் அவர்களின் தனிப்பெரும் முயற்சியாலும் 1994 ஆம் ஆண்டு இத்திருக்கோயில் நிறுவப்பட்டது. தமிழகத்திலிருந்து விநாயகர், முருகன் வள்ளி தெய்வானை சிலைகள் வரவழைக்கப்பட்டு உரிய முறையில் கும்பாபிஷேகமும் நடைபெற்றது.

தில்லி மயூர்விஹாரைச் சேர்ந்த வரும், தமிழறிஞரும், முருகபக்தரு மானஅனந்தகிருஷ்ணன் மற்றும் ரவி, ராஜாராமன் மற்றும் சுரேஷ், சுவாமிநாதன், அவர்களுக்கு உறுதுணையாக நின்றவர்களில் குறிப் பிடத்தக்கவர்கள்.

சுவாமிநாதன் அவர்களின் தலை மையில், சுப்பிரமணிய சேவா சமிதியால் இத்திருக்கோயில் பரா மரிக்கப்பட்டு, கருணாகரன் செல்வராஜ் ஸ்வாமி குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றி வந்தனர்.

'தாத்தா' என்று இப்பகுதி தமிழர்களால் அழைக்கப்பட்டு வந்த திரு வேங்கட சுப்பிரமணியர் அவர்கள் முயற்சியால் முன் மண்டபம் அமைக்கப் பட்டது. தற்போது திரு ரங்கராஜன் அவர்களின் தலைமையில் சமிதியானது, தில்லி மற்றும் இப்பகுதியில் வாழும் புலம் பெயர்ந்த தமிழர்களின் உதவியால் தொடர்ந்து பராமரிப்புத் திருப்பணி மேற்கொண்டு வருகிறது.

மஹா சங்கடஹர சதுர்த்தி, முதல் விநாயக சதுர்த்தி, கந்த சஷ்டி பங்குனி உத்திரம் வைகாசி விசாகம் தைப்பூசம் போன்றநாட்களில் முருகனுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனை களும் நடைபெற்று வருகின்றன.

2022 ஆம் ஆண்டு தொடங்கி கார்த்திகை மாதம் முழுவதும் இப்பகுதி பெண்கள் ஆலயத்தை தீபங்களால் அலங்கரிக்க, அண்ணா மலை தீபத்தின் எதிரொளியாக மகாதீபம் ஏற்றப்படுகிறது.

அண்மையில் (27.3.2023) முரு கனின் திருக்கல்யாணக் கோல உற்சவருக்கு சென்னையைச் சேர்ந்த ஸ்தபதி கண்ணன்அவர்களால் கண்திறப்பு வைபவம் நடைபெற்றது. திருமணம் நடைபெற வேண்டிக் கொண்டால் பலிதமாகும் சிறப்பு இத்திருக்கோயிலுக்கு உண்டு..



எஸ்.வெங்கடேசன்

– எஸ்.வெங்கடேசன்,
நொய்டா தொடர்பு எண்: 9811161370




# ஸ்ரீரங்கநாதருக்கு பழையசோறு மாவடு நெய்வேத்தியம்

ரங்கநாத பெருமான் பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீரங்கத்தில் எல்லா நாளுமே திருநாள் தான்.

அதில் வித்தியாசமான, ஆனால் எல்லோரையும் நெகிழ வைக்கும் திருவிழா ஒன்று பங்குனி பிரம்மோற்ஸவத்தின் மூன்றாம் நாள் நடைபெறுகிறது.

பழைய சோறும், மாவடுவும் என்று புகழப்படும் இந்த திருவிழாவில் கலந்து கொள்ள ரங்கநாத பெருமான் ஸ்ரீரங்கம் விட்டு ஜீயர்புரம் என்ற ஊருக்கு கிளம்பி செல்கிறார்.

அங்கு சவரத் தொழிலாளர்களின் மண்டகப்படி பெருமாளுக்கு நடைபெறுகிறது. அந்த விழாவில் முகம் திருத்தும் தொழிலாளி ஒருவர் ரங்கநாத பெருமாளுக்கு எதிரே கண்ணாடி காட்டி கண்ணாடியில் தெரியும் ஆண்டவரின் பிம்பத்திற்கு முகம் திருத்தம் செய்வது போன்று ஒரு நிகழ்வு நடைபெறுகிறது.

அதன்பிறகு முகம் திருத்தும் தொழிலாளிக்கு மரியாதை செய்யப்படுகிறது. இந்த திருவிழாவில் ரங்கநாதருக்கு நைவேத்தியமாக பழைய சோறும், மாவடுவும் அளிக்கப்படுகிறது.

வெண்ணையும் மண்ணையும் உண்ட அந்த ஆதிமூல பெருமானுக்கு பழைய சோறு, மாவடுவும் விருந்தளிக்கப்படுகிறது என்று நீங்கள் ஆச்சரியப்படலாம்.

ஆம், இதன் பின்னால் நெஞ்சை உருக்கும் ஒரு கதை உள்ளது.

ஜீயர்புரம் என்பது காவிரிக்கரை அருகே உள்ள அழகான கிராமம்.

அந்த ஊரில் ரங்கநாதரையே சர்வகாலமும் நினைத்து வாழும் ஒரு பாட்டி இருந்து வந்தாள். இளமையிலேயே கணவனை இழந்த அவளுக்கு

இரண்டே உறவுகள் தான்.

ஒருவர் ரங்கநாத பெருமாள், மற்றொருவர் அவளின் பேரன் ரங்கன். ஏழ்மையிலும் இறைவனை மறக்காத அந்த பாட்டி, உட்கார்ந்தால் 'ரங்கா' எழுந்தால் 'ரங்கா' என்றே வாழ்ந்தவள்.

அவளுக்கும் ஒருநாள் சோதனை வந்தது. அந்த சோதனை வழியே அவளை ஆட்கொள்ள எண்ணினார் கார்வண்ணன். அன்று பாட்டியின் பேரன் முகம் திருத்திக்கொண்டு வருவதாக சொல்லிக்கொண்டு காவிரிக்கரைக்கு சென்றான். அங்கு முகம் திருத்தி விட்டு காவிரியில் இறங்கி குளித்தான்.

மென்மையாக ஓடிக்கொண்டிருந்த காவிரி ஊழி வெள்ளம் பாய்ந்ததைப் போல பெருகிவரத் தொடங்கியது. பெருகிய வெள்ளத்தில் பாட்டியின் பேரன் ரங்கன் இழுத்துச் செல்லப்பட்டான்.

நேரமாகியும் திரும்பாத பேரனை எண்ணி பாட்டி கவலைப்பட்டாள். ரங்கநாத பெருமாளை தொழுது அழுது காவிரிக்கரைக்கு சென்றாள். அதே வேளையில் காவிரி இழுத்துச் சென்ற ரங்கன் ஸ்ரீரங்கத்தின் அம்மா மண்டபத்துக்கு அருகே கரை ஒதுங்கினான்.

உயிர் பிழைத்த ரங்கன், ஸ்ரீரங்கத்து ஆண்டவனை தரிசித்து காப்பாற்றியதற்கு நன்றி சொன்னான்.

தன்னை எண்ணி இந்நேரம் பாட்டி அழுவாளோ என்று பதறி ரங்கநாதரிடம் முறையிட்டான்உடனே கிளம்பினான். பேரன் செல்லும் வரை பாட்டி துடிப்பாளே என்று பரந்தாமனும் எண்ணி னார்.

பக்தரை காக்கும் பரந்தாமன் பொறுப்பாரா? காவிரியின் வெள்ளம் கண்டு அழுது புலம்பிக் கொண்டிருந்த பாட்டியை ஆற்றுதல் படுத்த கிளம்பினார் பரந்தாமன்.

ஆம், பாட்டி அழுது கொண்டிருந்த ஜீயர்புரத்து காவிரி கரையருகே முகத்திருத்தம் செய்த முகத்தோடு குளித்து எழுந்த நிலையில் பாட்டியின் பேரன் ரங்கனாகவே வந்தார் பெருமாள்.

பாட்டி மகிழ்ந்தாள். பேரனை கட்டி அணைத்து வீட்டுக்கு கூட்டி சென்றாள். பசித்திருந்த பேரனுக்கு பழைய சோறும் மாவடுவும் அளித்து சாப்பிட சொன்னாள்.

பரந்தாமன் சாப்பிட்டுக் கொண்டிருந்த அதே வேளையில் உண்மையான பேரன் ரங்கன் வந்து விட்டான். பாட்டி திகைத்தாள்.



அழகுராஜா

அடியவருக்கு அடைக்கலம் தரும் பெருமான் சிரித்தபடியே மறைந்தான். பாட்டியும் பேரனும் ரங்கநாத பெருமானின் அருளை எண்ணி தொழுதார்கள்.

அவரின் திருவுளம் எண்ணி அழுதார்கள். அன்று பக்தையை ஆறுதல் படுத்த வந்து பழைய சோறும், மாவடுவும் உண்ட ரங்கநாத பெருமாள் இன்றும் அதை நினைவூட்ட ஆண்டுதோறும் பிரம்மோற்ஸவ விழாவில் இதை நடத்தி வருகிறார்.

ஏழைக்கு ஏழையான நம்பெருமாள் என்றுமே நம்மை காப்பார் என்பதையே இந்த நிகழ்ச்சி காட்டுகிறது.

**– முதன்மை செய்தியாளர்**
**அழகுராஜா 9994323622**



# தமிழர்களுக்கு கிடைத்த பெரிய புதையல்



மயிலாடுதுறையில் தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான சீர்காழி சட்டை நாதர் ஆலயத்தில் இன்று கண்டெடுக்கப்பட்ட தெய்வத் திருமேனிகள் மற்றும் தேவார செப்பேடுகள்!

மயிலாடுதுறையில் 22 ஐம்பொன் சிலைகள் 55 பீடம், 100க்கும் மேற்பட்ட செப்பேடுகள் மற்றும் பூஜை பொருட்கள்.

சைவ மரபின் தலைமைக் குரவரான சம்பந்தப் பெருமான் அவதரித்தருளிய சீர்காழியில் தேவாரப் பாடல்கள் எழுதப்பட்ட 400க்கும் மேற்பட்ட செப்பேடுகள் கிடைத்துள்ளன.

தமிழக வரலாற்றிலேயே இத்தகைய அற்புத நிகழ்வு இதற்கு முன் நடந்ததில்லை என்று சொல்கிறார்கள்.

தேவாரத் திருமுறைகளை செப்பேடுகளில் எழுதி வைத்ததாக கல்வெட்டுகள் கூறுகின்றன.

ஆனால் இப்போதுதான் முதன்முறையாக தேவாரத் திருப்பாடல்கள் எழுதப்பட்ட செப்பேடுகள் இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் கிடைத்துள்ளன.

இவற்றில் இதுவரை கிடைக்காத தேவாரப் பாடல்கள் உள்ளனவா என ஆய்வு செய்ய வேண்டும்.

புதிய பாடல்கள் கிடைப்பின் அவை நம் பன்னிரு திருமுறை அச்சுப் பதிப்பில் சேர்க்கப்பட்டு பரப்பப்பட வேண்டும்.


அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஒர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் 160 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# கந்த சாமியும் மும்மூர்த்தியின் வடிவமே




கடவுள் உருவாக்கிய மதம்

சிவபெருமானுக்கும் சக்தி அம்மைக் கும் மகனாக வந்து பிறந்த முருகப்பெருமானுக்கு ஆறு திருமுகங்கள் உண்டு ஆறு திருமுகமும் அமர்ந்து அருள் செய்ய ஆறுபடை வீடுகளும் உண்டு ஆறு திருமுகத்தில் அருள் மழை பொழியும் பன்னிரு திருவிழிகளும் உண்டு.

அருள்சுரக்க பன்னிருதிருவிழிகள் என்றால் அருள்கொடுத்து காக்க பன்னிரு கரமும் உண்டு அழகிய இப்பன்னிரு கரத்தை திரு முருகாற்றுப்டை பாடிய நக்கீர பெருமான்

வண்புகழ் நிறைந்து
வசித்து வாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபில் ஐவர் கேந்தியது
ஒருகை, உக்கஞ் சேர்த்தியது ஒருகை,
நலம்பெறு கலிங்கத்து
குறங்கின்மிசை யசை இயது ஒருகை
அங்குசம் கடாவ ஒருகை, இருகை
ஐயிரு வட்டமோடு
எக்குவலந் திருப்ப ஒருகை
மார்பொடு விளங்க ஒருகை
தாரொடு பொலிய ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசை கொட்ப ஒருகை
பாடின் படுமணி இரட்ட ஒருகை
நீனிர் விசும்பின் மலிதுளி பொலிய ஒருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அனுபவம்

ஆக்க பன்னிரு கையும் பார்பட இயற்றி

என்று அழகு தமிழில் பாடுகிறார். மேலோட்ட மாக படிக்கும் போது சில வார்த்தைகள் இடரும் சில பொருள் புரியாமல் தெறித்தும் ஓடும் மனதை உள்முகமாக செலுத்தி ஆழ்ந்த தமிழரிவோடு சிந்தித்தால் இலைகளுக்குள் மறைந்திருக்கும் சுவை மிகுந்த கனி கண்ணுக்கு தட்டுபடுவது போல் பாடலின் பொருளும் நன்றாக விளங்கும்.

நக்கீரர் சொல்கிறார் நலமார் ஆருமுகம் கொண்ட திருமுருகனுடைய பன்னிரு கரங் கள் பகைவரை அடக்கவும் துஷ்டர்களை சம்ஹாரம் செய்யவும் அடியவர்களை காக்கவும் அமைந்துள்ளது என்று சொல்லி மோட்சம் அடைவதற்கு வழிவகை சொல்லி ஞானிகளை வழிநடத்துவதற்கு ஒரு கரமும் மருங்கிலே வைக்கப்பட்டது மற்றொரு கரமும்.

செம்மை நிறமுடைய ஆடையால் அழகுபட மூடப்பட்டிருக்கும் முருகனின் திருதொடையில் ஊன்றி இருக்கும் ஒரு கரமும் அங்குசம் பிடித்து யானையை செலுத்த ஒருகரமும். அழகிய பெரிய பரிசையோடு வேற்படையை வலமாகச் சுற்றி ஒரு கரமும். முனிவர்களுக்கு தத்துவங்களை விளக்கி பொருளை உணர்த்தும் பொருட்டு திருமார்போடு ஒருகரமும்.




அதற்கு இணையாக மார்பில் மற்றொரு கையும் கீழ் நோக்கி விழுகின்ற தொடியொடு மேலே சுழன்று வேள்விக்கு முத்திரை கொடுப்பது ஒருகரமும் ஓசையில் இனிதாக ஒலிக்கின்ற மணியை ஒலிக்க செய்ய ஒருகரமும். நீல நிறமுடைய மேகத்தை கரிய மேகமாக்கி மழைபொழிய வைக்க ஒரு கரமும். தெய்வ மகளிர்களான வள்ளி தெய்வானைக்கு மண மாலை சூட்டி நிற்க ஒரு கரமும். பயன்படுவதாக சந்தம் மிக்க தமது கவிதை நடையில் அழகுபட சொல்கிறார்.

திருமுருகாற்று படையில் நக்கீரர் முருகன் மீது


● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்




கொண்ட காதலை அழகு தமிழில் கவிதையாக வடித்ததை படித்து ரசித்து உள்ளம் உருகி பக்தி பழமாக ஆனவர் குமரகுருபர அடிகளார் இவரும் தானறிந்த செந்தமிழில் தமிழுக்கே தலைவனான கார்த்திகேயனை நெஞ்சம் உருக பல பாடல்களை பாடி தந்திருக்கிறார். முன்னோரான நக்கீர பெருமான் முருகனின் பன்னிரு கரத்தை பாடியது போலவே குமரகுருபர அடிகளும் தனக்கே உரிய தமிழ்நடையில் பாடுகிறார். அந்த பாடலையும் ரசித்து விட்டு நாம் அடுத்த விஷயத்திற்கு சென்றால் தான் முழுமையான மன திருப்தி ஏற்படும்.

வேரி கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பார புறசைலம் பன்னிரண்டும் ஆரமுதம்
தேவர் குதவும் திருக்கரமும் சூர்மகளிர்
மேவக் குழைந்தனைத்த மென்கரமும் ஓவாது
மாறி பொழிந்த மலர்கரமும் பூந்தொடையல்
சேர வணிந்த திருக்கரமும் மார்பகத்தில்
வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கிலொரு கரமும் மொய்த்த
சிறுதுடிசேர் கையுமணி சேர்ந்த தடங்கையும்
கறுவுசமர் அங்குசம் சேர் கையும் தெறுபோர்
அதிர்கே டகஞ் சுழற்றும் அங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்கும் கரமும்

இவைகளெல்லாம் புராணங்களை அடியொற்றி கூறப்பட்ட வர்ணனைகள் இந்த வர்ணனைகளை தாண்டி சிந்தனைக்கு விருந்துவைக்கும் ஞான விஷயங்களும் முருகனின் பன்னிரு திருக் கரத்தில் அமைந்துள்ள ஆயுதங்களுக்கு உண்டு முருகனின் கரத்திலுள்ள தோமரம் சுத்த தத்துவங்களைப் படைக்கும் ஆற்றலை குறிக் கும் அடையாளமாகும்.

அதே போலவே துவசம் அதாவது கொடி பிரபஞ்ச வெளிப்பாட்டையும் வாள் ஜனன மரணத்தை அறுப்பதையும் வஜ்ராயுதம் எவராலும் வெல்லபடாததையும் ஈட்டி மற்றும் கோதண்டம் உயிர்களிடம் மண்டிக்கிடக்கும் மும்மல இருட்டை அழிப்பதையும் அங்குசமும் அம்பும் முக்குணங் களை இயக்குவதையும் கண்டை பரநாதம் என்ற ஓம்கார தத்துவத்தையும் கமலம் நியதி படி உலகத்தை படைத்து அழிப்பதையும் மழு உயிர்களின் துன்பங்களை போக்குவதையும் வேல்அஞ்ஞானத்தை அகற்றுவதையும் குறிக்கும்.

முருகன் என்ற அழகான வடிவத்திற்குள் மறைந்திருக்கும் அரும்பொருளை இதுவரை கண்டோம். இதுமட்டுமா முருகனின் சிறப்பு இன்னும் ஏராளம் இருக்கிறது. அவைகளை எல்லாம் சொல்ல போனால் பலநூறு பக்கங்கள் எழுத வேண்டும். முருகனின் உருவம் மட்டும் சிறப்பு வாய்ந்தது அல்ல முருகன் என்ற பெயரே பல சிறப்புகளை தன்னகத்தே கொண்டது. இந்திய திருநாடு எங்கும் பரவி கிடக்கும்

கௌமார சமயத்தின் ஆதார தத்துவமே முருகன் காக்கும் கடவுளாகவும் படைக்கும் கடவு ளாகவும் அழிக்கும் கடவுளாகவும் அதாவது மும்மூர்த்திகளாகவும் இருக்கிறான் என்பதே இந்த தத்துவம் முருகு என்ற வார்த்தைக்குள் அடங்கி விடுகிறது.

அதாவது முருகு என்ற பதத்தில் முதல் எழுத்தாக வரும் மு காக்கும் கடவுளான மகாவிஷ்ணுவின் முகுந்தன் என்ற திருநாமத்தை சுட்டுகிறது.

அடுத்ததாக வரும் ரு என்ற எழுத்து ஆனந்த தாண்டவம் ஆடிநிற்கும் சிவபெருமானின் ருத்திரன் என்ற திருபெயரை காட்டுவதாகும். கடேசியாக வரும் கு படைக்கும் கடவுளான பிரம்மனை குறிப்பது அது எப்படி என்றால் பிரம்ம தேவனுக்கு குரு இருளை போக்குபவன் என்ற மற்றொரு பெயரும் உண்டு அந்த குரு என்ற பதத்தில் வரும் முதல் எழுத்தே முருகு என்ற திருநாமத்தில் வரும் கடேசி எழுத்தாக இருக்கிறது.







எனவே இந்து மதத்தில் எந்தப் பிரிவை நீங்கள் எடுத்தாலும் ஒவ்வொரு பிரிவுக்கும் தனிதனி தெய்வங்களை சுட்டி காட்டினாலும் அந்த தனிதனி தெய்வங்கள் வேறு வேறு அல்ல எல்லாமே ஒன்றான மூலப்பரம்பொருளை சென்றடைவதே ஆகும் என்ற தத்துவத்தில் தான் முடிவடைகிறது.

மூல பரம்பொருளின் மூன்று தன்மைகள் படைத்தல் காத்தல் அழித்தல் என்பதாகும். விஷ்ணுவை தலைவனாக கொண்ட வைஷ்ண வமும் அவனே முத்தொழிலுக்கும் அதிபதி என்கிறது. சிவபெருமானும் அப்படியே கருதபடுகிறார்.

சக்தியும் விநாயகரும் கூட முத்தொழிலின் அதிபதியாகவே வணங்க படுகிறார்கள். அதே போலவே கண்கண்ட தெய்வமான கந்த சாமியும் மூன்று தொழிலை ஒருங்கே செய்யும் மும்மூர்த்தியின் வடிவமாகவே பக்தர்களால் கண் ணார கண்டு பக்தி செய்ய படுகிறார்.

இதுவரை இந்து மதத்தில் சிவன் விஷ்ணு சக்தி விநாயகர் முருகன் ஆகிய ஐம்பெரும் தெய்வங்களை வழிபாடும் மார்க்கங்களையும் தத்து வங்களையும் சிந்தித்து பார்த்தோம் இனி ஆறாவதாக உள்ள சௌரம் என்ற பிரிவில் உள்ள சூரிய வழிபாட்டை பற்றி சிந்திப்போம் சூரிய வழிபாட்டின் ஆழத்தையும் தெரிந்து கொண்டால் தான் இந்து மதத்தின் முழு வடிவத்தை ஓரளவு புரிந்து கொள்ளலாம். இனி அடுத்து வரும் அத்தியாயங்களில் சிறிது சூரிய நமஸ்காரம் செய்வோம்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434




## ஒரே கோவிலில் மூன்று சிவலிங்க தரிசனம்

## கல்வியில் சிறக்க, திருமண தடை நீங்க எதிலும் வெற்றி பெற அருளும்

# கடுந்துருத்தி

சிவன் கோவில்களில் ஒருவித்தியாசமான நடைமுறை பல கோவில்களில் கடைபிடிப்பதைப் பார்த்திருப்போம்.

அந்த வகையில் தமிழக சிவன் கோவில்களில் கடைபிடிக்கும் நடைமுறைக்கும், கேரள சிவன் கோவில்களில் கடைபிடிக்கும் நடைமுறைகளும் சற்று வித்தியாசமாக இருக்கும்.

கேரள மாநிலத்தில் பெரும்பாலான சிவன் கோயில்களில் மூலஸ்தானத்தில் சிவன் மட்டும் இருப்பார். அம்மன் இருக்க மாட்டார். இதனாலேயே கர்ப்பகிரகத்தை இடமிருந்து சுற்றும் போது கோமுகி வரையிலும் சென்று, பின் அதே வழி வந்து சாமி தரிசனம் செய்து விட்டு, பின் வலப்புறம் சென்று கோமுகியை வணங்கி விட்டு பின் வெளி வருவார்கள்.

ஏனென்றால் சிவன் அம்பாளுடன் இல்லாமல் தனியாக கர்ப்பகிரகத்தில் இருக்கும் போது சிவனது சடையில் கங்கை இருப்பாள். அபிஷேக தீர்த்தம் எல்லாம் கங்கா தீர்த்தமாக கோமுகி வழியாக வரும்.

கோமுகியை தாண்டினால் கங்கையை தாண்டிய தவறு ஏற்படும். எனவே கோமுகியை




தாண்டமாட்டார்கள்.

அந்தவகையில் தம்பதி சமேதராய் கேரளாவில் காட்சிதரும் சிவஸ்தலங்களில் ஒன்று கடுந்துருத்தி.

கோட்டயத்திற்கு அருகே பழமையான மகாதேவர் கோயிலாக கடுத்துருத்தி விளங்குகிறது.

மூலஸ்தானத்தில் சிவன் அம்மனுடன் தம்பதி சமேதராக அனுக்கிரக மூர்த்தியாக அருள் பாலிக்கிறார்.

வைக்கத்தில் ஞானம் கொடுக்கும் தட்சிணா மூர்த்தியாகவும், கடுத்துருத்தியில் சகல சவுபாக்கியங்களை கொடுக்கும் தம்பதி சமேதராக அனுக்கிர மூர்த்தியாகவும், ஏற்றுமானூரில் வெற்றி கொடுக்கும் காட்டாளன் ரூபத்திலும் சிவன் அருள்பாலிக்கிறார்.

கல்வியில் சிறக்க விரும்புவர்கள், திருமணத்தில் தடை உள்ளவர்கள், எதிலும் வெற்றி பெற விரும்புவர்கள் ஒரே நாளில் இந்த மூன்று தலங்களையும் தரிசித்தால் சிறந்த பலன் உண்டு என்றும், அவர்களுக்கு மறு ஜென்மம் கிடையாது என்பதும் நம்பிக்கை.

கடுந்துருத்தியில் அருள்புரியும் இறைவனை வணங்கினால் கல்வியில்சிறக்கவும், திருமணத் தடை நீங்கவும், எடுத்த காரியத்தில் வெற்றி பெறவும் பக்தர்கள் இத்தல இறைவனிடம் பிரார்த்தனை செய்துகொள்கின்றனர்.

இத்தலம் கிழக்கு பார்த்த திசையில், சிறு குன்றின் மீது அமைந்துள்ளது. இந்த மூன்று கோயில்களுக்கும் சென்று வழிபாடுவதை வழக்கமாக கொண்டிருந்தார் வடக்கன்கூர் ராஜா.

வயதான காரணத்தால் மூன்று கோயில்களுக்கும் சென்று வழிபாடு செய்ய வடக்கன்கூர் ராஜாவால் முடியவில்லை.

எனவே கடுத்துருத்தி கோயிலின் வடக்குப் பகுதியில் வைக்கத்தப்பனை கிழக்கு நோக்கியும், தெற்குப்பகுதியில் ஏற்றமானூரப் பனை மேற்கு நோக்கியும் என மூன்று சிவனை யும் ஒரே தலத்தில் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்தார்.

எனவே மூன்று கோயில்களுக்கும் செல்ல முடியாதவர்கள் கடுத்துருத்தி மகாதேவர் கோயில் சென்று வழிபாடு செய்து, கோயிலை சுற்றி வந்தாலே மூன்று தலங்களுக்கும் சென்ற பலன் கிடைக்கும் என தல புராணம் கூறுகிறது.

## மூன்று சிவஸ்தலங்கள் தோன்றிய வரலாறு

முன்னொரு காலத்தில் கரண் என்ற அசுரன் மோட்சம் அடைய வேண்டும் என்பதற்காக சிவனை நோக்கி கடும் தவம் செய்கிறான்.

தவத்திற்கு மகிழ்ந்த சிவன் கரணுக்கு 3 சிவலிங்கம் கொடுத்து தென் திசையில் பிரதிஷ்டை செய்து பூஜை செய்து வர சொன்னார். வலக்கையில் ஒரு லிங்கமும், இடக்கையில் ஒரு லிங்கமும் எடுத்து கொண்ட அவன் மூன்றாவது லிங்கத்தை எப்படி எடுத்து செல்வது என தெரியாமல், வாயில் கடித்து இருத்தி சென்று பிரதிஷ்டை செய்ததால் இத்தலம் "கடித்துருத்தி' எனப்பட்டது.

இதில் வலக்கையில் இருந்த லிங்கத்தை வியாக்ரபாத மகரிஷியிடம் கொடுத்து வைக்கத்தில் பிரதிஷ்டை செய்ய கூறினான். இடக்கையில் இருந்ததை ஏற்றுமானூர் கோயிலில் கொடுத்து பிரதிஷ்டை செய்யும் படி கூறினான்.

அமைவிடம்: வைக்கத்திற்கும் ஏற்றுமானூருக்கும் இடையில் இத்தலம் அமைந்துள்ளது. வைக் கத்திலிருந்து இத்தலத்திற்கு 14 கி.மீ. இத்தலத்திற்கு ஏற்றமானூருக்கு 14 கி.மீ. என ஒரே தூரம் இருப்பதும் ஒரு சிறப்பம்சம் தான். கோட்டயத்திலிருந்து வடக்கே 30 கி.மீ. தூரத்தில் கடுத்துருத்தி அமைந்துள்ளது. கோட்டயத்திலிருந்து வைக்கம் செல்லும் பஸ்களில் இத்தலம் செல்லலாம்.

# ஒரே கோவில் இரண்டு பெயர்

# எதிரியின் பலத்தை பாதியாக குறைக்கும் திருவாலீஸ்வரர்

சிவபெருமானை மூலவராகக் கொண்டு உலகம் முழுவதும் கோயில்கள் இருக்கின்றன. குறிப்பாகக் கம் போடியா, நேபாளம், இலங்கை, எனப் பல நாடுகளைக் கூறலாம். இவற்றினை விடவும் பாரத கண்டம் என்றும் அழைக்கப்படுகின்ற இந்தியாவில் அநேக சிவாலயங்கள் உள்ளன. அவை எண்ணிக்கை அடிப்படையில் முப்பீட ஸ்தலங்கள், பஞ்ச பூதத் தலங்கள், பஞ்ச கேதார தலங்கள், பஞ்ச தாண்டவ தலங்கள், பஞ்ச மன்ற தலங்கள், பஞ்ச பீட தலங்கள், பஞ்ச குரோச தலங்கள், பஞ்ச ஆசன ஸ்தலங்கள், பஞ்ச லிங்க ஸ்தலங்கள், ஆறு ஆதார தலங்கள், சப்த விடங்க தலங்கள், சப்த கரை சிவ தலங்கள், சப்த கைலாய தலங்கள், அட்டவீரட்டான தலங்கள், நவலிங்கபுரம், நவ கைலாயங்கள், நவ சமுத்திர ஸ்தலங்கள், தச வீராட்டனதலங்கள் எனவும்,

சைவ அடியார்களால் பாடல் பெற்றதைக் கொண்டு தேவாரத் திருத்தலங்கள், திரு வாசகத் திருத்தலங்கள், தேவார வைப்புத் தலங்கள், திருச்சிற்றம்பலக் கோவையார் திருத்தலங்கள், திருவிசைப்பாத் திருத் தலங்கள் எனவும், வன விசேசதலங்கள், முக்தி தரவல்ல சிவத்தலங்கள், சோதிர் லிங்க தலங்கள், ஆதி கைலாய தலங்கள் எனவும் வகைப்படுத்தப்படுகின்றன.

இவற்றில் தேவாரம் பாடல்பெற்ற தலமானது தேவாரப்பாடல்பெற்ற காவிரி தென்கரைத் தலங்களின்பட்டியல், தேவாரப் பாடல் பெற்ற காவிரிவடகரைத் தலங்களின் பட்டியல், தேவாரப்பாடல் பெற்ற பாண்டிய நாட்டு தலங்களின் பட்டியல், தேவாரப்பாடல் பெற்ற கொங்கு நாட்டு தலங்களின்பட் டியல், தேவாரப்பாடல் பெற்றநடுநாட்டு தலங்களின்பட்டியல், தேவாரப்பாடல் பெற்ற தொண்டை நாட்டு







தலங்களின் பட்டியல் எனவும் வகைப் படுத்தப் பட்டுள்ளது.

இத்தலங்களில் உமையம்மை, பிரம்மா, திருமால், இந்திரன், சப்தகன்னியர்கள், நவகிரகங்கள், தேவலோக மங்கைகள், நட்சத்திரங்கள், சூரியன், சந்திரன் எனப் பலர் சிவபெருமானை வழிபட்டுள்ளனர். வழிபட்ட வர்களின் வேண்டுதல்களால் சிலதலங்கள் வழிபட்டோரின் சிறப்பு தலமாகவும் அறியப்படுகின்றன.

இதன் வரிசையில் சென்னை, கோடம்பாக்கத்தில் அமைந்துள்ள அருள்மிகு சொர்ணாம்பிகை சமேத திருவாலீஸ்வரர் என வழங்கப்படும் பரத்வாஜேஸ்வரர் திருக்கோயில் நமது தொண்டை நாட்டிலுள்ள 24 கோட்டங்களுள், “தொண்டை நாடு சான்றோர் உடைத்து” எனப் போற்றப்படும் நாலாறு கோட்டங்களுள் புலியூர் கோட்டம் இரண்டாவது கோட்டமாக உள்ளது. 24 கோட்டங்களுக்கும் தலைநகர் குன்றத்தூர் கோட்டமாகும். இச்சிறப்புப் பெற்ற புலியூர் கோட்டத்தில் திரேதா யுகத்தில் (இராமாயண காலத்தில்) வாழ்ந்த வானர அரசன் வாலி, ஏற்றம் நிறைந்த பரத்வாஜ மகரிஷி, இராமபிரான், நள சக்கரவர்த்தி மற்றும் ஊர்வசி (அப்சரஸ்) ஆகியோர் இத்தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானை வழிபட்டு பெரும்பேறு பெற்றுள்ளனர்.

பெரிய புராணம் இயற்றிய திருத்தொண்டர் சேக்கிழார் சுவாமிகள் புராணத்தை அருளிச் செய்த உமாபதி சிவாச்சாரியார் புலியூர் கோட்டத்தின் சிறப்பைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

...தொண்டை நாட்டுள்

நாலாறு தோட்டத்துப் புலியூர்க் கோட்ட<br>
நன்றிபுனை குன்றைவா நாட்டுமிக்க<br>
சேலாறு கின்னவயற் குன்றத்தூரில்<br>
சேக்கிழர் திருமரபு சிறந்தநன்றே







என்று சிறப்பாகக் கூறியுள்ளார்.

ஸ்ரீ திருவாலீஸ்வரர், ஸ்ரீ பரத்வாஜேஸ்வரர் ஸ்ரீ இராமனாதேஸ்வரர் ஆகிய பெயர்களால் இறைவன் தொன்று தொட்டு வழங்கப்படுகிறார்.

இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுச் செய்தியின் படி, இத்தலம் "திரிபுவன சக்கரவர்த்தி ஸ்ரீ விஜய கண்ட சோழரால் 29ஆவது ஆண்டு கட்டப்பட்ட ஜயங்கொண்ட சோழ மண்டலத்தின் புலியூர் கோட்டமான குலோத்துங்க சோழ வளநாட்டுப் புலியூர் திருக்கோயில்" என இத் தலத்தின் பின்புறம் உள்ள கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ விஜயகண்ட சோழர் (29வது பட்டம்) அந்தி (காலை) சந்தி (மாலை) ஆகிய இரண்டு வேளைகளிலும் விளக்கேற்றுவதற்காக 1,000 (ஆயிரம்) ஆடுகளையும், 1,000 (ஆயிரம்) பசுக்களையும் இத்திருத்தலத்து இறைவனுக்கு தானமாகத் தந்துள்ளார். சுவாமி சன்னதியில் மேற்கு நோக்கி உபபீடம் அதிஷ்டான வர்க்கத்தில் ஜெகதீவரியில் பொறிக்கப்பட்டுள்ளது.

தொல்லியல் துறையின் மதிப்பீட்டின்படி இக்கல் வெட்டு 800 ஆண்டுகளுக்கு முந்தையது என உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

ஆந்திராவைச் சேர்ந்த மன்னன் ஸ்ரீ பெத்தப்ப சோழன் இத்திருத்தலத்திற்கு திருப்பணி செய் துள்ளதாகவும் கல்வெட்டில் எழுதப்பட்டுள்ளது.

மேலும் குஜராத்தைச் சேர்ந்த சிற்றரசனான பக்திமான் ஸ்ரீ இராமநாத பாண்டியாஜி சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் இத்திருத் தலத்திற்கு வந்து இறைவனை வழிபட்டு சந்தான ப்ராப்தம் (குழந்தைப் பேறு வேண்டிச் செய்யப்படும் பிரார்த் தனை) செய்தார். இறைவனின் அனு கிரகத்தால் அவ்வரசனுக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது, இதனால் மகிழ்ச்சி அடைந்த மன்னன் அக்குழந்தைக்கு இறைவனின் திரு நாமமாகிய சிவசங்கரன் (பாண்டியாஜி) என்னும் பெயரை வைத்தார்.

வளர்ந்து பெரியவனான சிவசங்கரன் பக்தியுடன் அவ்வூரிலேயே தங்கி மல்லிப் பூந்தோட் டங்கள், குளங்களை அமைத்து சிவபூஜை செய்து வந்தார். அந்த இடத்தில் குடிப்பிருப்புகளை அமைத்து, சிறப்பு வழிபாட்டிற்காகக் காஞ்சி மாநகரிலுள்ள ஸ்ரீ ஏகாம்பரநாதர் தேவஸ்தானத் திலிருந்து திரு.சுப்புராயசிவாச்சாரியார் அவர் களை வரவழை த்து, தகுந்த ஏற்பாடுகளைச் செய்து தந்துள்ளார். அன்று முதல் இன்று வரை அந்த சிவாச்சாரியார் வம்சத்தினர்களே, இத்தலத்து சிவபெருமானுக்கு மிகுந்த சிரத்தையுடன், செம்மையாக சிவபூஜைகளை செய்து வருகின்றனர்.

இத்தலம் பல்லவர்காலத்து கட்டிடக்கலையின் சாயலில் கட்டப்பட்டுள்ளதாக செவிவழிச் செய்தி பண்டைய காலத்திலிருந்தே நிலவி வருகிறது.

ஒருமுறை கயிலாயத்தில் பரத்வாஜர் கருங் குருவியாக வலியன் உருவெடுத்து பூவுலகிலுள்ள பரத கண்டத்தில் தொண்டை நாட்டிலுள்ள சென் னையம்பதியில் பாடி / திருவலிதாயம் என்னும் ஊரில் இறைவனுக்குப் பூஜை செய்து ரிஷி உருவம் பெற்று இப்புலியூர் இறைவனையும் வழிபட்டதாகச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

## பக்தர்கள் நலனில் அக்கறையில்லை

சென்னையில் மிகப் பழமையான கோவில் இது, ஆனால் இதுவரை பொது வெளியில் அதிகம் பிரபலப்படுத்தாமல் தவிர்க்கப்படுகிறது. கபாலீஸ் வரர் கோவில், வடபழனி முருகன் கோவிலைவிட இக்கோவிலுக்கு சொத்துக்கள் அதிகம்.

ஆனாலும் பராமரிப்பு, குறிப்பாக பக்தர்களுக்கு எந்த அடிப்படை வசதியும் கிடையாது. அதிகப் படியாக இடம் இருந்தும், காலனி, வாகன நிறுத்தம் போன்றவற்றிற்கு எந்த வசதியும் செய்துதரவில்லை, அறநிலையத்துறையும் கோவில் நிர்வாகமும் பக்தர் களின் நலனை கருத்தில் கொள்ளாமல் நடந்து கொள்வது வேதனை.

திருவிழா சமயங்களில் கோபுர வாசலில் காலனிகள் சிதறி அலங்கோலமாக காட்சிதருவது சிவபக்தர்களுக்கு மன வருத்தம் தருவதாக உள்ளது.





www.aanmeegamalar.com

தன்னை எதிர்க்கும் எதிரிகள் தன் முன்தோன்றினால் அவர்களின் பலம் பாதியாக குறையவேண்டுமென்ற வரம் பெற்றவர் வாலி, இதன்படி வாலி இத்தலத்து இறைவனை வழிபட்டுள்ளதால், அந்த வரத்தின் சக்தி இத்தலத்து இறைவனுக்கும் உள்ளதாக கூறப்படுகிறது.

இத்தலத்தில் வீற்றிருக்கும் ஈசனை தொடர்ந்து வழிபடுபவர்களுக்கு எதிரியின் பலத்தைக் குறைக்கும் ஆற்றல் கிடைக்கும் என கூறப்படுகிறது.

இத்தலத்தில் சப்த கன்னிமார்களுக்கு என்று தனியாக சன்னதி அமைக்கப்பட்டுள்ளது. கோசாலை மற்றும் யாக சாலையும் தனித்தனியாக கோவிலுக்குள் அமைக்கப்பட்டுள்ளது.

ஆன்மீக அன்பர்களின் உதவியுடன், பழமையான கோவிலை புதுப்பித்து, மிகுந்த நேர்த்தியான சிற்பங்கள் மற்றும் திருக்கோவில் முழுவதும் மிகுந்த பொலிவுடன் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

கோபுரம் இன்றி இருந்த இத்திருத்தலத்தை, ஐந்து நிலை ராஜகோபுரம் கட்டி மிகச் சிறந்த சிற்பக் கோவிலாக மாற்றியுள்ளனர் இக்கோவிலை பராமரித்து வரும் சிவாச்சாரியார் வம்சத்தினர்.

பரபரப்பு மிகுந்த சென்னையில் சிற்பங்கள் நிறைந்த திருக்கோவிலாக திகழ்கிறது ஸ்ரீ திருவாலீஸ்வரர் திருக்கோவில்.

இத்தலத்தில் உள்ள நாகலிங்க மரம் பல நூறு வருடங்கள் பழமையானதாக செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. ஆலமரத்தைப் போன்று மிகவும் பிரம்மாண்டமாக காட்சி தரும் இம்மரத்திற்கு தனியாக பீடம் அமைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி இம்மரத்தின் வேர் இக்கோவிலின் எல்லை வரை பரந்து விரிந்துள்ளதாக கூறப்படுகிறது.

இத்திருத்தலத்தில் பிரதோஷ விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்படும். மேலும் சித்திரை மாதத் திருவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும். ஒவ்வொரு சித்திரை மாதத்திலும் ஒன்பது நாட்கள் விழாக் கோலம் காணும் இத்திருத்தலத்தில் கடைசி நாளன்று திருக்கல்யாண வைபவம் நடைபெறும்.இத்தலத்தில் பரத்வாஜ முனிவர், வாலி சுதை சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளது. இராமபிரான் வழிபட்ட இராமநாதேஸ்வரருக்கு தனியாக சன்னதி உள்ளது.

எதிரிகளின் தொல்லை அதிகம் இருப்பவர்கள் வாலி வழிபட்ட சிவஸ்தலங்களுக்கு சென்று வழிபட்டால் எதிரிகளின் தொல்லை நீங்கும். கணவன் மனைவி இடையே பூசல்கள் இருந்து விலகி இருந்தால் இராமபிரான் வழிபட்ட சிவலிங்கங்களை வழிபட்டால் பிரிந்த தம்பதியினர் ஒன்று கூடுவர் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

அந்தவகையில் மேற்கண்ட இரண்டு பிரச்சனைகளையும் தீர்த்துவைக்கும் ஒரே தலமாக ஸ்ரீ திருவாலீஸ்வரர் திருத்தலம் விளங்குகிறது.

இத்திருத்தலம் அமைந்துள்ள புலியூர் கிராம தேவதை ஸ்ரீ முப்பாத்தம்மன் ஆவர். இத்தலத்திற்கு செல்ல, சென்னையிலிருந்து பல்வேறு பேருந்து வசதிகள் உள்ளன. சென்னை கோடம்பாக்கம் சென்று, அங்கு பவர் அவுஸ் பஸ் நிலையத்தில் இறங்கி இத்திருத்தலத்திற்கு செல்லலாம். இத்திருத்தலத்திற்கு ஸ்ரீ திருவாலீஸ்வரர் திருக்கோவில் மற்றும் பாரத்வாஜேஸ்வரர் திருக்கோவில் என்று இரண்டு பெயர் இருப்பதால் பெரும்பாலும் பரத்வாஜேஸ்வரர் திருக்கோவில், என்று விசாரித்தாலே பலருக்கு தெரியும்.

இந்த சித்திரை திருவிழாவிற்கு ஒருமுறை இத்தலத்திற்கு சென்று இறை அருளையும், சிற்ப அழகையும் கண்டு களியுங்கள்.

மேலும் இத்திருக்கோயில் பற்றிய விவரங்கள் அறிய 9940430750 என்ற என்னை தொடர்பு கொள்ளலாம்.

தொகுப்பு: கீதாராஜன்,
செல்:9444228203

# ஆன்மீக வழியில் அமைதி




**64**

மாயையும் பிரம்மமும் சேர்ந்ததுதான் இந்த பிரபஞ்சம் என்று சாஸ்திரம் கூறுகிறது. பிரபஞ்சத்தை அதாவது உலகத்தில் உள்ள அனைத்து உயிரினங்களையும் சிருஷ்டித்தவர் ஈஸ்வரன். ஸ்தூல பஞ்ச பூதங்களான ஆகாயம், நீர், நெருப்பு, காற்று, பூமி ஆகியவற்றை நாம் இந்த உலகத்தில் ஸ்தூலமாக அனுபவவித்துக் கொண்டிருக்கிறோம். நாம் பிரபஞ்சத்தில் அனுபவவிக்கும் பஞ்சபூதங்கள் முதலில் சூக்ம பஞ்சபூதங்களாக இருந்தன. சூக்ம பஞ்சபூதங்கள் அதன்பிறகு ஸ்தூல பஞ் சபூதங்களாக மாறியது என்று சாஸ்திரம் கூறுகிறது. உலகில் நாம் காணும் எந்த ஒரு பொருளும் செயலும் காட்சிகளும் இயக்கங்கள் உயிரினங்கள் அனைத்தும் காரணநிலை , சூக்ம, ஸ்தூல என்று மூன்று நிலைகளிலிருந்துதான் தோன்றியது என்று சாஸ்திரம் கூறுகிறது.

மாயையின் ஒவ்வொரு மாற்றம்தான் நாம் காணும் இந்த பிரபஞ்சம் ஆகும் . உலகில் காணும் மேஜை, நாற்காலி, மாட்டுவண்டி, பூட்டு, சாவி போன்ற அனைத்து ஜடப்பொருட்களும் அனைத்து உயிரினங்களின் இயக்கங்கள்,காட்சிகளும் செயல்கபாடு ளும் மாயை ஆகும். அதாவது உலகில் காணும் அனைத்து ஜடப்பொருட்கள், அனைத்து உயிரினங்களின் இயக்கங்கள், செயல்பாடுகள், காட்சிகள் எல்லாம் மாயை ஆகும். இந்த பிரபஞ் சம் தோன்றுவதற்கு மாயையின் மாற்றங்கள்தான் காரணம் ஆகும்.

நாம் வாழும் உலகத்தில் மாயை என்பது இதுதான் என்று சுட்டிக் காட்டுவதற்கு முடியாது. அதற்குக் காரணம் மாயை என்பது மாறிக்கொண்டே இருக்கும் தன்மை உடையது. இந்த மாயையை இரண்டு விதமாக கூறலாம். ஒரு கோணத்தில் சிந்தித்துப் பார்க்கும்பொழுது நாம் காணும் பிரபஞ்சத்தை மாயை என்றும் கூறலாம். மற்றொரு கோணத்தில் பார்க்கும்போது பிரம்மத்துடன் மாயை சேர்ந்து இருப்பதால் மாயையை ஈஸ்வரன் என்றும் கூறலாம்.

எடுத்துக்காட்டாக நாம் ஒரு பனிக்கட்டியை சுட்டிக்காட்டி இதுதான் பனிக்கட்டி என்று உறுதியாக ஒருவரிடம் கூற முடியாது. ஏனென்றால் அந்தப் பனிக்கட்டி சிறிது நேரத்தில் உருகி திரவம் நிலைக்கு வந்து விடும். உருகிய தண்ணீரை பனிக்கட்டி என்று கூறுவதா அல்லது தண்ணீர் என்று கூறுவதா என்று குழப்பம் ஏற்பட்டு விடுகிறது. அதுபோல்தான் மாயை என்பது மாறிக்கொண்டே இருப்பதால் இதுதான் மாயை என்று நாம் சுட்டிக்காட்டுவதற்கு முடியாது.

எனவே இந்த உலகத்தை ஒருகோணத்தில் மாயை என்றும் கூறலாம். மற்றொரு கோணத்தில் ஈஸ்வரன் என்றும் கூறலாம். மாயையும் ஈஸ்வர அம்சமும் சேர்ந்ததுதான் நாம் காணும் இந்தப் பிரபஞ்சம் தோன்றுவதற்குக் காரணம் ஆகும்.

பகவத்கீதையில் பகவான் நாம் காணும் இந்த பிரபஞ்சம்தான் நான்தான் என்று தன்னைப்பற்றி கிருஷ்ண பராமாத்மா கூறுகிறார். இந்த உலகம் என்பது நிரந்தரம் இல்லை என்றும் அது அநித்தியம் என்றும் கீதையில் சுட்டிக் காட்டப்படுகிறது. அதாவது உலகில் காணும் பொருட்கள் அனைத்தும் நிரந்தரம் இல்லை. இந்த பிரபஞ்சம் அநித்தியம் என்று கண்ணன் பகவத்கீதையில் தெளிவுபடுத்துகிறார். அதனால் அநித்தியமான இந்த உலகப்பொருட்கள் மீது பற்று கொள்ளாமல், தாமரையிலைத் தண்ணீர்போல் இந்த உலகில் பற்றற்று இரு என்று நமக்கு அறிவுறுத்துகிறார். நித்திய தத்துவமாக இருக்கும் என்னை சரணாகதியடைந்து விடு என்று பகவான் கிருஷ்ணன் கீதையில் கூறுகிறார்.

இந்த உலகம் அநித்தியம் என்றால் உலகில் காணும் காட்சிகளும், செயல்களும் இன்ப துன்பங்கள் அனைத்தும் நிரந்தரமல்ல என்று நமது மனம் தெளிவடைந்து விடுகிறது. அதனால் நம்மையும் அறியாமல் நமது மனம் பக்குவநிலைக்கு வந்து விடுகிறது. கீதையில் பகவான் குறிப்பிட்டபடி இந்த உலகமே அநித்தியம் என்று நினைத்து உலகில் மனிதர்கள் பற்றற்று வாழ்ந்தால், மனிதர்கள் விரும்பும் தேடும் மன அமைதி கிடைக்கும்.

இந்த உலகத்தை ஒரு கோணத்தில் பார்த்தால் கீழானது என்று நினைத்து அதனை ஒதுக்கலாம். இந்த உலகத்தை மற்றொரு கோணத்தில் பார்த்தால் ஈஸ்வர அம்சம் என்று நினைத்து வணங்கவும் செய்யலாம். இந்த உலகத்தை கீழானது என்று நினைத்து முற்றிலும் ஒதுக்கி விடாமல் அதனை வெறுத்து விடாமல் அதற்குச் சாட்சியாக இருந்துகொண்டு இந்த உலகத்தினை அனுபவவிக்கலாம் என்ற அர்த்தத்தில்தான் கீதையின் மூலம் கிருஷ்ண பராமாத்மா போதிக்கிறார். அதாவது இந்த உலகத்துடன் மிகுந்த பற்றுகொண்டு அதனுடன் நமது மனம் ஆழ்ந்து விடக்கூடாது என்று அறிவுறுத்துகிறார்.

இந்த உலகம் என்பது மாயை என்று மனதில் நன்கு பதிந்து வைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு மனதில் உலகத்தைப் பற்றி நினைத்து நாம் பற்றற்று வாழும்போது இந்த மாயை உலகத்தைக் கண்டு மயங்க மாட்டோம். உலகம் என்பது அநித்தியம் என்று நினைத்து வாழும்போது, நம்மை அறியாமல் நம் மனதில் மனபக்குவம் கிடைத்து விடும். அதாவது மத வேறுபாடு, ஜாதி வேறுபாடு, பணக்காரன், ஏழை , உயர்ந்தவன், தாழ்ந்தவன் போன்ற பிரச்சனைகள் ஏற்படுவதில்லை. அதனால் உலகத்தின் துன்பங்களிலிருந்து நமக்கு விடுதலை கிடைக்கும். அதாவது உலகத்தில் காணும் இன்ப துன்பங்களை சமநிலையில் பார்க்கும் மனபக்குவ நிலைக்கு மனிதன் வந்து விடுகிறான். அவ்வாறு மனம் பக்குவநிலைக்கு வரும்போது நாம் தேடும் விரும்பும் அமைதி நம்மை அறியாமல் வந்து விடும்.

பிரம்ம தத்துவத்துக்கும் மாயை தத்துவத்துக்கும் ஒரு ஒற்றுமை காணப்படுகிறது. அதாவது நித்திய தத்துவமாக இருக்கும் பிரம்மமும் அநாதி. அதேபோல் அநித்திய தத்துவமாக இருக்கும் மாயையும் ஒரு அநாதி என்று சாஸ்திரம் கூறுகிறது. அநாதி என்பது பிரம்மம், மாயை போன்றவற்றின் காலத்தைக் கணக்கிட்டுக் கூற முடியாது. பிரம்ம தத்துவம் நித்திய தத்துவமாக இருக்கிறது. மாயை, பிரம்மத்துடன் சேர்ந்து இந்த உலகமாக காட்சி அளிக்கிறது. பிரம்ம தத்துவம் இந்த மாயை தத்துவத்தை தன்னோட கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது. பிரம்ம தத்துவத்துடன் மாயை சேர்ந்து இந்த உலகத்தை ஈஸ்வரன் படைத்தார். அதாவது மாயை மூலம் இந்த உலகத்தை ஈஸ்வரன் வெளிப்படுத்துகிறார் என்று கூறலாம். பிரபஞ்சத்தில் மாயை என்பது தனித்து இருப்பதில்லை. பிரம்மத்துடன் சேர்ந்துதான் மாயை தன்னை நாம் காணும் பிரபஞ்சமாக வெளிப்படுத்துகிறது.

சிருஷ்டியின் மூல காரணம் எது என்று சிந்தித்துப் பார்த்தால் பிரம்மத்துடன் சேர்ந்த மாயைதான் உலகமாக காட்சி அளிக்கிறது.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

மாயை என்பது பிரபஞ்சத்தின் ஒரு சிறு அம்சம்தான் என்று வேதம் கூறுகிறது. உலகத்தில் அந்த சிறு அம்சம்தான் மாற்றத்தை அடைந்துகொண்டே இருக்கிறது. பிரம்ம தத்துவத்துடன் மாயை சேர்ந்து இந்த உலகத்தை ஈஸ்வரன் சிருஷ்டித்தார். அவர் சிருஷ்டியை நான்கு நிலைகளில் இருந்து பிரபஞ் சத்தை வெளிப்படுத்துகிறார். சூக்ம பஞ்சபூதங்களின் சிருஷ்டி என்பது முதல்நிலை சிருஷ்டி ஆகும். பஞ்சபூதங்கள் என்பது நாம் புரிந்துகொண்ட ஆகாசம்,




வாயு, நெருப்பு, நீர், பூமி ஆகிய சூக்ம பஞ்சபூதங்கள் ஸ்தூல பஞ்சபூதங்களாக மாறி வரப்பெற்றுள்ளது என்று சாஸ்திரம் கூறுகிறது. அதாவது நாம் காணும் ஸ்தூல பஞ்சபூதங்களை இந்த உலகத்தில் அனுபவவித்துக்கொண்டு இருக்கிறோம்.

ஒரு அழகிய ஓவியம் உருவாக வேண்டுமானால், ஓவியன் வரையக்கூடிய உருவத்தை முதலில் மனதில் நினைத்தால்தான் அவன் நினைத்த அல்லது அவன் விரும்பிய ஓவியம் உருவாகும். எடுத்துக்காட்டாக ஒரு யானையின் உருவத்தை வரைய வேண்டும் என்று ஓவியன் நினைக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். யானையின் உருவத்தை வரைய வேண்டுமானால் முதலில் அவன் உள்ளத்தில் அவனையும் அறியாமல் சூக்மமான யானை என்ற உருவம் தோன்றி விடும். அதன் பின்தான் அவன் யானை என்ற உருவத்தை நம் கண்ணுக்குத் தெரியும்படி அழகிய ஸ்தூல யானை ஓவியமாக தீட்டுவதற்கு முடியும்.

உலகில் ஏதாவது ஒரு புதிய பொருள் உருவாக வேண்டுமானால் அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும். உலகில் ஏதாவதொரு புதிய பொருள் உருவாக வேண்டும் என்றால் காரண நிலை, சூக்ம நிலை, ஸ்தூல நிலை என மூன்று நிலைகளின் அடிப்படையில்தான் ஒரு புதிய பொருள் தோன்றுவதற்கு முடியும் என்று சாஸ்திரம் கூறுகிறது. முதல்நிலை காரணம், இரண்டாம்நிலை சூக்மம், மூன்றாம் நிலை ஸ்தூலம் ஆகும். ஓவியனின் மனதில் மூன்று நிலைகளில் யானை ஓவியம் உருவானதுபோல் பஞ்ச பூதங்களால் சூழப்பட்ட இந்த உலகம் சூக்ம பஞ்சபூதங்கள் நிலையிலிருந்து ஸ்தூல பஞ்சபூதங்களாக மாறி இந்த பிரபஞ்சம் உருவாகியது என்று சாஸ்திரம் கூறுகிறது.

அதாவது இந்த உலகம் தோன்றுவதற்கு ஏதோவொரு காரண நிலை இருக்கும். அந்தக் காரணநிலைதான் நாம காணும் பிரபஞ்சம் மாயை என்னும் முதல் சிருஷ்டி ஆகும். சூக்மமான பஞ்சபூதங்கள் சூக்ம பஞ்சபூத சரீரங்களாக மாறி விடுகின்றன. அதாவது இரண்டாவது சிருஷ்டி சூக்ம பஞ்சபூத சரீரங்கள் என்னும் சிருஷ்டி ஆகும். மூன்றவது சிருஷ்டி என்பது சூக்மமான பஞ்சபூதங்கள் ஸ்தூலமான பஞ்சபூதங்களாக மாறுவது ஆகும். ஸ்தூலமான பஞ்சபூதங்கள் ஸ்தூல பஞ்சபூதங்களின் சரீரங்களாக மாறுவது நான்காவது சிருஷ்டி என்று சாஸ்திரம் கூறுகிறது.

மாயை என்ற பிரபஞ்சம் காரண நிலையிலிருந்து சூக்கும நிலைக்கும் சூக்ம நிலையிலிருந்து ஸ்தூல நிலைக்கும் மாற்றம் ஏற்பட்டு இந்த உலகம் ஈஸ்வரனால் படைக்கப்பட்டது என்று சாஸ்திரம் கூறுகிறது. ஓவியனால் யானை ஓவியம் உருவாவதுபோல் இந்த உலகம் காரணம், சூக்ம, ஸ்தூல நிலை என்று மூன்று நிலைகளிலிருந்து தோற்றுவிக்கப்படுகிறது. ஓவியன் மனதில் யானை சூக்மமாக உருவாவதுபோல் பஞ்சபூதங்கள் சூக்மமாக இருந்து ஸ்தூலமாக மாறி இந்த மாயை என்னும் பிரபஞ்சம் உருவாகிறது. பஞ்ச பூதங்கள் காரண நிலையில் இருந்து சூக்ம நிலைக்கு மாறி விடுகிறது. அதாவது பஞ்சபூதங்கள் சூக்ம மனமாக மாறி விடுகிறது. சூக்ம பஞ்சபூதங்கள் அதன்பின் ஸ்தூலமாக மாறி அதாவது பஞ்சபூதங்களின் சரீரங்களாக மாறி நாம் காணும் உலகத்தை தோற்றுவித்தது. மாயையிலிருந்து முதலில் தோன்றியது சூக்ம பஞ்ச பூதங்கள் என்று ஆன்மிகம் கூறுகிறது.

முதல் சிருஷ்டி என்பது ஐந்து சூக்ம பூதங்கள் என்று கூறலாம். இரண்டாவது சிருஷ்டி என்பது சூக்ம சரீரங்கள் ஆகும். அதாவது சூக்ம பஞ்ச பூதங்களிலிருந்து சூக்ம சரீரங்கள் தோன்றின என்று சாஸ்திரம் கூறுகிறது. ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து பிராண சக்தி, பஞ்சகோசங்கள், புத்தி, மனம், சித்தம் போன்றவை சூக்ம சரீரங்கள் ஆகும். பார்க்கும் சக்தி, கேட்கும் சக்தி, நுகரும் சக்தி, சுவைக்கும் சக்தி, தொட்டு உணரும் சக்தி இவையெல்லாம் நம் கண்ணுக்குத் தெரியாத ஞானேந்திரங்கள் ஆகும். .

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308





## அக்ஷய தீர்த்தத்தில் நீராடி

# தொழுநோயிலிருந்து விடுபட்ட நவகிரகங்கள்

வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் நல்கி வினைகள் யாவும் களைந்திடும் விநாயகப் பெருமான் வீற்றருளும் அதி உன்னதமான திருத்தலம் திருமாந்துறை.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான இந்த திருமாந் துறை சூரியனின் க்ஷேத்திரமாக திகழும் சூரியனார் கோவிலுக்கு அருகே கஞ்சனூ ருக் கும் திருமங்கலக்குடிக்கும் மத்தியில் அமை யப்பெற்றுள்ளது.

"கஞ்சனூர் ஆண்டதங் கோவைக்
கண்ணுற் றிறைஞ்சி முன்போந்து
மஞ்சணி மாமதில் சூழும்
மாந்துறை வந்து வணங்கி
அஞ்சொல் தமிழ்மாலை சாத்தி
அங்ககன் றன்பர் முன்பாகச்
செஞ்சடை வேதியர் மன்னுத்
திருமங்கலக்குடி சேர்ந்தார்"

– திருத்தொண்டர் புராணம்,
சேக்கிழார்.

ஆன்மிகமலர் .com
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

பூஞ்சோலைகள் பூத்துக்குலுங்கும், மூங்கில் மரங்கள் தேனிசை சுரக்கும், பறவைகள் பறந்து விளையாடும் இந்த அழகு கொஞ்சும் திருமாந் துறையை தனது தேவாரத் தேன் பாடல்களால்

அருள் மொழிந்துள்ளார் திருஞானசம்பந்தர். இதற்கு சேக்கிழார் தனது பெரியபுராணத்திலே நிரூபணம் காட்டியுள்ளார். இருப்பினும் அப்பாடல்கள் நமக்கு கிடைக்கப் பெறவில்லை.

மாமரங்கள் சூழ்ந்த மாங்காட்டில் அம்பிகை கிளி வடிவில் இருந்து சிவனை பூஜிக்கின்றாள். இறைவன் காட்சி தந்து கிளிரூப சாபம் நீக்கி, திருவருள் புரிகின்றார். பின்னர் அம்பிகை இங்கு சுவாமிக்கு வலதுபுறத்தில் கல்யாண கோலத்தில் எழுந்து அருளாட்சி செய்கின்றாள்.

காவிரியாற்றின் வடக்குத் துறையில் அமைந்த மா வனமாகியதால் இத்தலம் மாந்துறை எனப்பட்டது. வடமொழியில் இதை சூதவனம் மற்றும் ஆம்ரவனம் என்றுமழைப்பர்.

அம்பிகை திருவருள் பெற்ற இத்தலத்தில் காலமாமுனிவர் தவமியற்றி வரும் வேளையில், அவருக்கு தொழுநோய் பீடிக்கிறது.

தொழுநோயால் அவதியுற்ற காலமாமுனிவர் நவகிரகங்களை அழைத்து, இந்நோய் வர காரணம் கேட்கின்றார். அது ஊழ்வினையால் நிகழ்கிறது என ஒன்பது கிரகாதிபதிகளும் கூற... சிவனடியாரின் வல்லமையை உலகிற்கு உணர்த்தும்படியாக நவகிரகங்களுக்கே தொழுநோய் வரும்படி சாபமிடுகின்றார்.

அடியாரின் சாபம் அடுத்த கணமே வேலை செய்ய ஆரம்பித்தது. நவக்கிரகங்களுக்கும் தொழுநோய் உண்டானது. துவண்டனர் கிரகாதிபதிகள். காலமாமுனிவரிடமே சரணடைந்து, விமோசனம் வேண்டுகின்றனர்.

காலமாக முனிவர் நவகிரகங்களை இங்கே அழைத்துவந்து, மாந்துறைக்கு அருகிலிருக்கும் ஸ்வேதார்க்கவனம் என்னும் எருக்கங்காட்டில் தங்கச் சொல்லி, இத்தல ஆம்ரவனேஸ்வரரை வழிபட அறிவுறுத்துகின்றார். அதன்படி 15 தினங்கள் (ஒரு பக்ஷம்) இத்தல அக்ஷய தீர்த்தத்தில் நீராடி, சிவபெருமானை வழிபடுகின்றனர். மகர சங்கராந்தியன்று (பொங்கல்) ஈசன் காட்சி தந்து அவர்களது தொழுநோயினை நீக்கி சுகமளிக்கின்றார்.

இதனாலேயே மகர சங்கராந்தியன்று சூரியனை வழிபடும் வழக்கம் உலகில் உண்டானது. அதோடு, நவகிரகங்களும் தங்கியிருந்த எருக்கங்காடே இன்று சூரியனார்கோயிலாகத் திகழ்கின்றது. இதனாலேயே சூரியனார்கோவிலில் முதன்மை தெய்வமாக சூரியனும், அவரைச் சுற்றிலும் சந்திரன், அங்காரகன், புதன் உள்ளிட்ட கிரக தெய்வங்களும் உடனிருந்து அருள் பாலிக்கின்றனர்.

"அடியாரவர்க்கு மிகவே" என்னும் திருஞானசம்பந்தரின் திருவாக்கினை காலமாமுனிவர், உலகையே ஆளுமைப்புரியும் நவகிரகங்களுக்கு கற்பித்து, அடியாரின் மகிமையை உலகிற்கு உணர்த்தினார்.

க்ஷயம் என்றால் ஹீனம் {குறைபாடு} என்று பொருள். காலமாமுனிவர் மற்றும் நவக்கிரகங்களுக்கு


www.aanmeegamalar.com




உடலிலும், மனதிலும் ஏற்பட்ட குறை பாட்டினை நீக்கியருளியதால், அதுமுதல் ஆம்ரவனேஸ்வரர் "அக்ஷயநாதர்" எனப் பெயர் பெற்றார். அதோடு, மனக்குறைகளையும், உடல் நோய்களையும் நீக்கிடும் அரும்பெரும் தலமாக இம்மாந்துறை புகழ் பெற்றது.

தமிழகத்திலேயே உச்சிஷ்ட கணபதிக்கு சிறப்புப்பெற்ற தலமாக இந்த மாந்துறை விளங்குகின்றது. இங்கே மாந்துறை அரனாரைப் பூஜித்து, அப்பன் ஈசனுக்கும் அம்மை உமைக்கும் நடுவே அமர்ந்து திருவருள் புரிகின்றார்.

இந்த கோலத்தை "விக்னேசானுகிரஹமூர்த்தி" என்று போற்றுவர். இவரை வழிபட்டால். சிசுஹத்தி தோஷம் நீங்குகிறது. கணவன் மனைவியிடையே ஒற்றுமையில்லாத் தன்மை, விவாகரத்துப் பிரச்சினைகள் என யாவும் தீர்ந்து, சுமுகமாக, சுகமாக வாழ்ந்திட, வழிபட வேண்டிய முதன்மை மூர்த்தியாக இந்த உச்சிஷ்ட கணபதி திகழ்கின்றார்.

அதோடு பில்லி, சூனியம், மாந்திரீகம் போன்ற தீய மந்திர சக்திகளை அழித்து சகலவிதமான இடையூறுகளில்இருந்து பக்தர்களை காத்திடவே, ஆலய கன்னிமூலையில் உச்சிஷ்ட கணபதி அருள் பாலித்து வருகின்றார்.

தக்ஷனால் ஏற்பட்ட சாபம் நீங்கிட சந்திரன் வழிபட்ட அற்புதத் திருத்தலம் இந்த திருமாந் துறை.

குளிர்ந்த நீர் சூழ்ந்த அழகிய தாமரைக்குளம் [அக்ஷய தீர்த்தம்] முன்னே விரிந்திருக்க... காற்றில் வேணுகானம் தவழ்ந்து வர... பூந்தென்றல் நம்மை வருடி மெய்மறக்கச் செய்ய... ஓங்கிய மதில்கள் சூழ்ந்த ரம்மியமான சூழலில் அமைந்துள்ளது ஸ்ரீ அக்ஷயநாதர் திருக்கோயில்.

மூன்று நிலைகள் கொண்ட இராஜகோபுரம் வரவேற்கிறது. வெளியே நந்தியம்பெருமான். இராஜகோபுரத்தின் கீழே தல வரலாற்று புடைப்புச் சிற்பம் அற்புதமாக புடைக்கப்பட்டுள்ளது. உள்ளே வவ்வால் நெத்திமண்டபம். பின்னர் இடை மண்டபம் மற்றும் கருவறை.

கருவறையுள் கம்பீரத் தோற்றத்தில் கருணைப் பொழிகின்றார் ஸ்ரீ அக்ஷயநாதர். சதுர ஆவுடையார். வழவழ பச்சைக் கல்லாலான பாண லிங்கம். சர்வாலங்கார பூஷணராய் ஒளிர்கின்றார். க்ஷய ரோகங்களை நிவர்த்தி செய்யும் இப்பெருமான் அள்ளித் தரும் அட்சய பாத்திரமாய் அன்பர்களின் நெஞ்சத்தை அள்ளுகின்றார்.

பின், ஆலய வலம் வருகையில்...நிருர்தி மூலையில் வீற்றருளும் ஸ்ரீ உச்சிஷ்ட கணபதியை தரிசிக் கின்றோம். தீவினைகள் போக்கும் இந்த விக்னேசப்பெருமான் சுவாமிக் கும் அம்பாளுக்கும் நடுவில் அமர்ந்து அருள் புரிகின்றார்.



மோ.கணேஷ்

வள்ளி தெய்வானையுடனான சுப்பிரமணியர், திருமால் மற்றும் கஜலட்சுமி தனித்தனிச்சன்னதிகளில் அருள்பாலிக்கின் றனர். தென்கோஷ்ட தட்சிணாமூர்த்தி யோக வீராசன கோலத்தில் வீற்றுள்ளார்.

ஏனைய பரிவார தெய்வங்கள் உடன் சூழ... சுவாமியின் வலப்புறம் அம்பிகை கல்யாண கோலத்தில் தனிக் கோவில் கொண்டு அருள் பொழிகின்றாள்.

முன் மண்டபம், மகா மண்டபம், அர்த்த மண்டபம், கருவறை என்கிற அமைப்பில் அம்பாள் சன்னதி அமையப் பெற்றுள்ளது.

மூலஸ்தானத்தில் யோக வாழ்வினைத்தரும் ஸ்ரீ யோகாம்பிகை நின்றவண்ணம் புன்னகைத் தவழ அன்பர்களை தன்வசம் ஈர்க்கின்றாள். அவள் திருவடியிலேயே நிரந்தரமாக தங்கிவிடலாம் என்கிற எண்ணம் தோன்றுகின்றது நெஞ்சில்...!

அமைதியும், ஆனந்தமும் தவழும் ஆலயம் ஆன்மா லயிக்கிறது. இத்தலத்தின் விருட்சமாக மாமரமும், தல தீர்த்தமாக அக்ஷய தீர்த்தமும் திணறுகின்றது.

இராஜராஜசோழனின் அத்தையான செம்பியன் மாதேவியரால் திருப்பணி கண்ட ஆலயம். சோழர் காலக் கல்வெட்டுகள் இங்கு நிரம்ப உள்ளன. கடைசியாக இவ்வாலயம் 2003 ஆம் ஆண்டு குடமுழுக்கு கண்டுள்ளது.

தினசரி இரண்டு கால பூஜைகள் நடைபெறும் இவ்வாலயம் தினமும் காலை 8 மணி முதல் 12 மணி வரையும், மாலை 5 மணி முதல் 7 மணி வரையும் திறந்திருக்கும்.

இவ்வாலயத்தின் முக்கிய விசேடமாக வருடந்தோறும் அக்ஷய திரிதியை வெகு விமர்சியாக அனுசரிக்கப்படுகின்றன. அன்றைய தினம் கலச ஸ்தாபிதம் மற்றும் சிறப்பு ஹோமம் நடைபெற்று, 64 பொருட்களைக் கொண்டு செய்யப்படும் பஞ்சாமிர்த அபிஷேகம் வெகு விமரிசையாக செய்யப்படுகின்றன. வைகாசி விசாகம் தொடங்கி 10 நாட்கள் பிரம்மோற்சவம் நடைபெறுகின்றன. ஏனைய சிவாலய விசேடங்களும் சிறப்புடன் நடைபெறுகின்றன.

பல்வேறு உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்து மூன்று திங்கட்கிழமைகள் அர்ச்சனை செய்து, பச்சரிசி மற்றும் வெள்ளைத் தினை நைவேத்தியத்திற்கு தந்து, மிளகு சாதம் படைத்து, ரோக நிவர்த்தி அடைகின்றனர்.

அதோடு, திங்கட்கிழமைகளில் சுவாமிக்கு 108 சங்காபிஷேகம் செய்தும், சந்திர பரிகார ஹோமங்கள் செய்தும், மனம் மற்றும் உடல் உபாதைகளில் இருந்து விடுபட்டு நிம்மதி பெறுகின்றனர்.

சந்திரன் வழிபட்டு அருள் பெற்றதால், சந்திர பரிகார ஸ்தலமாகத் திகழ்கின்றது. ரோகிணியும் உடனிங்கு வழிபட்டதால், ரோகிணி நட்சத்திரம்




மற்றும் விருச்சிக ராசிக்கு உரிய பரிகாரத் தலமாக விளங்குகிறது இம்மாந்துறை.

தொடர்ந்து 5 திங்கட்கிழமைகளில் உச்சிஷ்ட கணபதிக்கு அர்ச்சனை செய்து, குடும்ப ஒற்றுமை மற்றும் ஏவல், பில்லி, சூனியம் போன்ற தீய சக்திகளிடமிருந்து விடுதலையுமு அடைகின்றனர்.

தள்ளிக்கொண்டே போகும் திருமணம் விரைவில் நடைபெற, சுவாமி மற்றும் அம்பாளுக்கு அபிஷேகம் செய்து, சீரக சாதம் நிவேதனம் செய்ய.....சிறந்த பலன் உண்டு.

எல்லாவித பாப சாபங்களில் இருந்து விமோசனம் அளிக்கும் தலமாக திகழ்கிறது. முக்கியமாக ஸ்த்ரீ (பெண்) சாபம், சிசு ஹத்தி (கருக்கலைப்பு) மற்றும் பித்ரு (முன்னோர்) சாப நிவர்த்தி ஸ்தலமிது.

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் வட்டத்தில் உள்ள இவ்வூர்.... கும்பகோணம் மயிலாடுதுறை பேருந்து சாலையில் உள்ள ஆடுதுறையில் இருந்து 2 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. ஆலய தொடர்புக்கு: ராஜு குருக்கள் தொலைபேசி எண் 9994032380.

– பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்பு எண்: 9789156179

# மனதிலே மாசு இருந்தால் அறிவின் முன் திரையாக விழும்

●●●

உனது தேகம் ஒரு பெரிய களிமண் மலை என்று கண்ணை மூடிக்கொண்டு எண்ணு. மனமென்னும் விரல்களால் நீயே அதை அழுத்தியழுத்தி குயவனைப் போன்று செய். விசுத்தியில் சுகம் ஏற்பட்டு மூதாதையரின் உருவம் தெரியும்; வந்தும் தங்கும்.

●●●

பக்தி, கடவுள்.. இவைகளை எண்ணியவுடன் நாக்கில் தேன் ஊறுகிறது என்று சொன்னால் நீயே பக்தன்.

மிருகங்களின் வழக்கங்கலெல்லாம் அவைகளின் ஒழுக்கங்களே. மனிதர்களே, உங்களது ஒழுக்கங்களின் வாத்தியார் மிருகங்களே.

●●●

நாய்க்கு எலும்புத்துண்டு அவசியம். அதுபோல் உனக்குக் கடவுளோ அல்லது ஏதாவது ஒரு சிந்தனையோ அவசியம்.

சிந்தனையினால் எதையும் முடித்துக் கொள்ளலாம். இது முடியும்.

சிந்திக்கின்றவர்களுக்கு அதிசயங்கள் எல்லாம் சிந்தனையாகவும் தெரியும்.

●●●

ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டால், எதையும் சாதித்துக் கொள்ள முடியும்.

●●●

உலகமும் நீயும் ஒன்று என்று எண்ணு. உலகத்தில் ஒருவன் மட்டுமே, ஒருவனாக இருக்கலாம்.

●●●

சிந்தனை எங்கும் இருக்கிறது. அதுபோல் புத்தன் எங்கும் இருக்கிறான்.

●●●

உன் கண்ணும், என் கண்ணும் ஒன்று என்று சொல். நினை. காலப் போக்கில் கடவுளும், நீயும் ஒன்று ஆகிவிடலாம்.

●●●

பத்து பைசா ஒரு ரூபாய்க்குள்ளும் இருக்கிறது. நூறு ரூபாய்க்குள்ளும் இருக்கிறது. நான் அன்புக்குள்ளும் அடக்கம். ஆண்டவனுக்குள்ளும் ஒடுக்கம்.

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

●●●

வாய் வேறு. வயிறு வேறு. இதனால் உலகில் அனைத்துமே வேறு வேறு. அதுபோல் கடவுளும் வேறு. கடவுள் அனுபவம் என்பதும் வேறு.

●●●

சங்கு தனியாக இருக்கிறது. திருமால் தனியாக இருந்தே சங்கைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டான். வெற்றி தனியாக இருக்கிறது. மனிதன் தனியாகவே பிறக்கிறான். அதனால் உலகில் மனிதனும் கடவுளும் பக்தி செய்து பிறகே சேருகின்றனர்.

●●●



நல்ல சிந்தனை எப்பொழுது ஓடும் என்று தெரிந்து கொள். பிறகு அதையே ஒட்டிக் கொண்டு மனிதன் நல்லவனாகி விடலாம்.

●●●

“ஓம்’’ என்பதே ஆக்ஞா சக்கரத்தின் மந்திரமாகும். மின்சாரப் பொறிகள் தெறித்து

ஓடுவதைக் கவனி. இதுபோல் "ஓம்..ஓம்'' என்பது நெற்றியிலிருந்து தெறித்து ஓடுவதைக் காண்.

●●●

பௌர்ணமி நிலவு இரண்டு புருவங்களுக்கு மத்தியில் தெரிந்தால் நல்லது. இதுவே "ஆக்ஞா சக்கரம்'' என்னும் ஆறாவது யோக நிலையாகும்.

●●●

கெட்ட சிந்தனைகள் அனைத்தும் தயாரிக்கப்பட்ட மாமிச உணவைப் போன்றது. புத்தியை சைவனாய் இருக்கச் சொல். அசைவனாய் இருக்கச் சொல்லாதே.

●●●

மனம் உணர்வுடன் ஆண்டவனை நினைத்தால், அதற்கே சைவ வழிபாடு என்று பெயர். சைவ உணவைப் போன்றதே சைவ வழிபாடு என்பதாகும்.

●●●

மனிதனின் புத்தி மணக்க சாம்பிராணி ஏதுமில்லை. சிந்தனையே சாம்பிராணி. சிந்தித்தால் மனிதனே மட்டிப்பால்.

●●●

ஸ்நானப் பொடியை போட்டுக் குளித்தால், உடல் மட்டுமே மணக்கும். உள்ளம் மணக்காது. ஆண்டவனை நினைத்தால் போதும்... ஆன்மாவே மணக்கும்.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்! .காம்

●●●

சிங்கம் ஆண்டவனாய் அவதாரம் செய்ததே நரசிம்ம ஜெயந்தி. ஆமையும் இப்படி செய்து அவதாரம் செய்ததே கூர்ம ஜெயந்தி. நீங்களும் இப்படியே எண்ணுங்கள். திருமாலின் பெருமை உடனே புரியும்.

●●●

மனிதா! உனக்கு உடலை எடுத்துக் கொள்ள உயிரைக் கொடுத்தவர்கள் யார் என்று எண்ணு. விடை கிடைத்தவுடன் உடனே அவர்களுக்கு மரியாதை செய்.

●●●


பண்டங்கள் வைக்கப் பாத்திரங்கள் செய்வது போல் உதவிகளைச் செய்யவே மனிதன் பிறக்கிறான்.

●●●

புளியமரம் புளி கொடுத்து உதவுவதுபோல் மனிதன் ஏதாவது ஒரு உதவியை ஊருக்குச் செய்ய வேண்டும்.

●●●

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல் செல்

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.




ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

# வேதங்கள்! ஆகமங்கள்!




வேதமோ டாகமம் மெய்யாம் இறைவனூல்.
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம் தென்பர் பெரியோர்க் கபேதமே.

– திருமந்திரம்.

"வேதமும், ஆகமமும்" நகமும் சதையும். போல, இறைவனின் மொழியாகவே கருதப்படுகிறது! இதையே, மாணிக்கவாசகர் கீழ்கண்ட பாடல் மூலம் கூறுகிறார்.

எல்லா பிறப்பும் பிறந்து இளைத்தேன்.
எம்பெருமான்!
மெய்யே! உன் பொன்னடிகள்.
கண்டு, இன்று வீடு. உற்றேன்;
உய்ய, என் உள்ளத்துள் ஓங்காராமாய் நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா;!
வேதங்கள் 'ஐயா' என.
ஓங்கி ஆழ்ந்த அகன்ற. நுண்ணியனே!

– என்கிறார்...

வேத காலத்து முனிவர்கள், தங்களின்உள்ளத்தில் எழுந்த வேதங்களின், "ஒலி", மற்றும் பரம்பொருளைப்பற்றிய தெளிவுகளை அறிந்தவர்கள் ஆவர். இவ்வாறு அவர்கள் அறிந்த, "வேதங்களையும்", "ஆகமங்களையும்", தங்களின் சீடர்களுக்கு. உபதேசித்து உள்ளார்கள்.

## வேதங்கள் என்றால் என்ன?

வேதங்கள் என்பது இந்து மதத்தின் "பிரமாண" நூல்கள் ஆகும்.

வேதங்கள், மனிதரால் உண்டாக்கப்பட்டது அல்ல! ஆம், வேதங்கள் இறைவனால் அருளப்பட்டதே ஆகும். என்பதுதான் இந்து மதத்தின். நம்பிக்கை.

ஐம்பெரும் பூதங்கள், என்பப்படும் "நீர்", "நிலம்", "காற்று" "வானம்" "நெருப்பு" ஆகியவற்றால். ஆனது தான் இந்த பிரபஞ்சம் ( உலகம் ).

மண் திணித்த நிலனும்
நிலம் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலை. இயதீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து. இயற்கை.......

– என்கிறது. புறநானூறு.

இவ்வாறு இயற்கையின் மூலம் இறைவனை

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் அன்பான ...

கண்டு வழிபட்டார்கள். இப்படி இயற்கை. தெய்வங்களை போற்றி அவர்கள். "தோத்திர" பாடல்கள் பாடினார்கள்.

இப்படி பாடப்பட்ட பாடல்களே. வேதாங்களாக" உருவாயிற்று!.

அவை, "ரிக்", "யஜுர்" "சாமம்" "அதர்வணம்" என. நான்கு. வேதங்களாக, மாறி. நூல் களாக. உருவானது.

- "ரிக்" என்றால். துதித்தல் என்று பொருள் வேதங்களில் இந்த ரிக் வேதம் முதல் வேதம்ஆகும்.
- "யஜுர்", என்றால் வழிப்படுதல், ஆம் யாகம் செய்து வழிப்படுதல் ஆகும்.
- "சாமம்", என்றால் சந்தோஷப்படுத்துதல் ஆகும்! சங்கீத அடிப்படை கொண்டது ஆகும்.
- "அதர்வணம்" என்றால். ஆபத்துக்கள், மற் றும். எதிரிகளின் தொல்லையில் இருந்து. விடு படுதல் ஆகும்.

இப்படிப்பட்ட. வேதங்களை. தொகுத்தவர், "வேத வியாசர்" என்று அறியப்படுகிறது..

## ஆகமம். என்றால் என்ன?

"ஆகமம்" என்பது. "தொன்று தொட்டு" (காலம். காலமாக ) பின்பற்றப்பட்டு. வரும். ஒரு. அறிவு (பழக்கம் ) ஆகும்.

இந்த ஆகம விதிகளின்படிதான் கோயில் களை. நிர்மாணம்(கட்டுவது) செய்வது! இதன் அடிப்படையில் இறை வனை வழிபாடு செய்வது! கோயில் களின் தேரை நிர்மா ணிப்பது!


கே.ஆர்.ஜி.ஸ்ரீராமன்

இறைவனின்வாக னங்களை நிர்மா ணிப்பது! மற்றும் அர்ச்சகர்கள் நிய மனம்! எனஉள்ளது.

ஆகம விதிகளில் 28 விதிகள் முக்கியத் துவம் வாய்ந்தது ஆகும். இது தவிர 207–உப. ஆகம. விதிகளும். உள்ளது..

இவ்வாறு வேதங்களும், ஆகமங்களும் நிறைத்து அதாவது இரண்டற கலந்து உள்ளது. தான் கோயில்கள், வழிபாடுகள்.... ஆகும்!..

வேதம் பரம் பொருள் ஒன்றே. என்பதை. உணர்த்துகிறது. சைவவர்களுக்கும் வைணவர் களுக்கும் சாக்கதர்ளுக்கும், வேதம் பொது வானது ஆகும். வேதம் அறிவோம்!! ஆகமும் அறிவோம் அதன்படி இந்து கோயில்களையும் இந்து. தெய்வத்தையும் போற்றி வணங்குவோம்...

– கே.ஆர்.ஜி.ஸ்ரீராமன்,
பெங்களூரு
போன் 99724 66443









பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள

**கீதாசமையல்**
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# மனதிற்குள்ளேயே கேள்வி கேட்டு பதிலை கண்டுபிடித்தால் மனம் பக்குவமடையும்




மனிதர்கள் என்னதான் வேத, கான, பூத, சமஸ்தானமாக இருந்தாலும், அவர்களின் மனதையே அவர்கள் ஆட்சிசெய்யும் கலையை கற்கவில்லையென்றால், அவர்கள் வாழ்வில் ஒருகட்டத்திற்கு மேல் மகிழ்ச்சி என்பது நிலையில்லாமல் நீங்கி, துன்பம் நாற்காலி போட்டு அமர்ந்து கொள்ளும்.

இந்த மனதிற்கு பகுத்தாய்வு செய்யும் கலையை மட்டும் நாம் கற்றுக் கொடுத்துவிட்டால் போதும், நடைபெறும் அனைத்து நிகழ்வின் நன்மை, தீமைகளை எளிதாக பாகுபடுத்தி பார்க்கத் துவங்கிவிடும்.

ஒருவன் அதித தெய்வபக்தி இருந்தாலும், கிரக தோஷத்தின்படி அவனுக்கு மிகப்பெரிய காயம் ஏற்பட வேண்டும் என்பது விதியாக இருந்தாலும், அந்த பக்தி அவனுக்குரிய காயத்தின் வீரியத்தையும், காயத்தினால் வடு ஏற்படாமல் தடுத்துவிடும். அதே சமயம் அவன் விதிப்படி அவனுக்கு காயமும் ஏற்பட்டிருக்கும், ஆனால் அதன் வீரியம் மிகச் சிறியதாக இருக்கும்.

இந்த இடத்தில் மனிதனின் மனம் சரியாக இருந்தால், "பெருசா வரவேண்டியது சிறியதா




முடிஞ்சிடுச்சி" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு இறைவனுக்கு நன்றி சொல்லி, அடுத்த பணிக்கு ஆயத்தமாகிவிடும்.

ஆனால் மனதை நாம் கட்டுப்படுத்தாமல் மேம்போக்காக விட்டுவிட்டோமானால், "எத்தனை முறை கோவிலுக்கு வந்திருப்பேன், இறைவா இப்படி எனக்கு அடிபடவைத்துவிட்டாயே" என்று புலம்பத் துவங்கிவிடும்.

மனதிற்கு இறைவனைப் பற்றிய தெளிவை தெளிவாக புரியவைத்துவிட்டால் போதும், மனம் லாடம் கட்டிய குதிரையைப் போன்று, அதுவே இறைவனின் செயலை ஆராய்ந்து அமைதி அடைந்துவிடும்.

பலரின் மனதை ஒரே சமயத்தில் ஆராய வைத்த பல்வேறு சம்பவங்கள் பல்வேறு காலகட்டத்தில் நடந்துள்ளதை அனைவரும் அறிவார்கள்.

இது சில வருடங்களுக்கு முன்னால் நடந்த ஒரு சிறு சம்பவத்தைப் பார்ப்போம்....

.........................

பொதுவாக நீதிமன்றங்களில் யாரை பெயர் சொல்லி அழைக்கிறார்களோ அவர்கள்தான் உள் ளே போவார்கள்.

ஆனால் அன்றைக்கோ வாய்தாவுக்கு வந்தி ருந்த அனைவருமே கும்பலாக நீதிமன்றத்திற் குள் குழுமியிருந்தார்கள்.

அதாவது மதுரையில் ஒரு பெண்ணை ஒரு இளைஞன் கேலி பண்ணுகிறான். அந்தப் பெண்ணின் மாமன் அந்தப் பையனை கண்டிக் கிறார்.

பையனின் மனசில் வன்மம் குடியேறி பழிவாங்கும் வெறியாக மாறுகிறது. தன்னைக் கண்டித்தவரின் இரண்டு வயசு பெண் குழந் தையை கடத்துகிறான்.

மதுரையிலிருந்து திருநெல்வேலிக்கு குழந்தை யுடன் வந்து ஊர் சுற்றுகிறான்.

குழந்தை அழத் தொடங்குகிறது.

ஒருபெரிய யானைப் பொம்மையை வாங்கிக் கொடுக்கிறான். ஆனாலும் குழந்தையின் அழு கை நிற்கவில்லை.

நகரத்தை விட்டு தனியே இருக்கும் ஒரு கோயிலுக்குப் போய் சேரும்போது மாலை நேரமாகிவிடுகிறது.

அந்தக் கோயிலை ஒட்டியுள்ள கிணற்றில் குழந்தையை வீசிவிட்டு தப்பிக்கிறான்.

மாலையில் அக்கோவிலைச் சாத்த குருக்கள் வரும்போது குழந்தையின் முனங்கல் கிணற்றுக் குள்ளிருந்து கேட்க குருக்கள் எட்டிப்பார்க்கிறார்.

குழந்தை யானைப் பொம்மையை இறுக்கிப் பிடித்தபடி தண்ணீரில் மிதந்து கொண்டிருக்கிறது.

அவர் கூச்சல் போட்டு ஊர் மக்களை உதவிக்கு கூப்பிடுகிறார். பொதுமக்கள் சேர்ந்து குழந்தையை காப்பாற்றுகிறார்கள்.

மீட்கப்பட்ட குழந்தை போலீஸ் வசம் ஒப்படைக் கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறது.

குழந்தையைக் காணவில்லை என்று யாராவது புகார் கொடுத்திருக்கிறார்களா என்று தமிழ்நாடு முழுவதும் உள்ள காவல் நிலையங்







மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்

களில்விசா ரித்து, ஒரே மணிநேரத்தில் நெல்லை லபோலீஸ் மதுரையில் இருக்கும் பெற்றோரை கண்டுபிடிக்கிறார்கள்.

இரவோடு இரவாக பெற்றோர்கள் நெல்லை வந்து சேர்கிறார்கள். அடுத்த நிமிடத்தில் குற்ற வாளியை கைது செய்கிறது காவல்துறை.

காலையில் அந்தக் குழந்தையை நீதிமன்றத் தில் ஒப்படைத்து, சட்டரீதியான நடவடிக்கைக்குப் பின் குழந்தையை பெற்றோரிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சியைப் பார்க்கவே அந்தக் கூட்டம்.

தன்னைக் காப்பாற்றிய அந்த யானைப் பொம்மையை இடுக்கிப் பிடித்தபடியே குழந்தையை ஒரு பெண்காவலர் கொண்டுவந்தார்.

அதைப் பார்த்ததும் அந்தத் தாய் அழுத அழுகை அனைவரின் கண்களும் பனித்தன.

அக்குழந்தையைப் பார்த்து தெய்வீகக் குழந் தை என்றார் நீதிபதி.

இன்னொருவர்...

எருமை வாகனத்தில் வந்து குழந்தையின் உயிரைப் பறிக்க முயன்ற எமன் தோற்றுப் போனான். காரணம் குழந்தை யானையிடமல்லவா இருக்கிறது. யானையை ஜெயிக்க எருமையால் முடியுமா. என்று எமனையும், விநாயகரையும் இணைத்து ஒரு அற்புதமான உவமையை கூறினார் இன்னொருவர்.




இதுதான் ஒரே சமயத்தில் ஒரு கூட்டத்தின் மனோ நிலையையும் இறைவன் தன்பக்கம் திருப்பி விட்டான். அனைவரின் மனதும் அவனின்றி அணுவும் அசையாது என்ற தத்துவத்தை ஏற்றுக் கொண்டனர்.

இதற்கு இன்னும் வலு சேர்க்கும் காரணத்தை கண்டுபிடித்தனர்.

வழக்கமாக அந்தக் கோவிலைச் சாத்திப் பூட்ட வருகிற குருக்களுக்கு இரண்டு காதுகளும் செவிடாம். அன்றைய தினம் திடீர் உடல்நலக் கோளாறினால் தன்னுடைய மருமகனை அனுப்பி யிருக்கிறார். அந்த காதுகேளாத குருக்கள் அன் றைக்கு வந்திருந்தால் குழந்தையின் முனங்கல் கேட்டிருக்காது.

குழந்தை இரவுமுழுக்க தண்ணீரில் மிதந்து விறைத்து இறந்திருக்கும்.

இப்படி ஒவ்வொரு காரணத்தையும் விலா வாரியாக மனதளவில் பிரித்து மேய்ந்து பார்த்து விட்டால் மனம் தன்னால் பக்குவப்பட்டு விடும்.

மனதை பக்குவப்படுத்த நமக்குள்ளேயே ஏன் எதற்கு என்ற கேள்வியை கேட்டுக்கொண்டே, அந்தக் கேள்விக்கு விடையை தேடி அறிவதன் மூலம் நம் மனம் எளிதாக பக்குவமடையும்.

பாதையைதேடி.

போன்: 9444228203

Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

# விருப்ப சந்தா செலுத்த










விருப்ப **சந்தா**

**UPI மற்றும் வங்கி வாயிலாகவும் சந்தா செலுத்துங்கள்...**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay

SCAN TO PAY

WITH ANY BHIM UPI APP

Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**